Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

வெளியீடு : 24-1-2014 Issued : 24-1-2014

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, அக்டோபர் 24, 2013—தொகுதி 56—எண் 2**

**Thursday the 24th October, 2013—Volume 56—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**24–10–2013**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 5-59 |
| **2. அறிவிப்புகள்—** | |
| (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 60 |
| (ஆ) அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு உறுப்பினர் தேர்தல் | 94-95 |
| **3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** | |
| தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013 | 60-61 |
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 60-61 |
| **4. அரசினர் தனித் தீர்மானம்—** | |
| இலங்கையில் நடைபெறவுள்ள காமன்வெல்த் கூட்டமைப்பு மாநாட்டினை இந்தியா முற்றிலும் புறக்கணித்து, இலங்கைத் தமிழர்கள் சிங்களர்களுக்கு இணையாக வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்வரை அக்கூட்டமைப்பிலிருந்து அந்நாட்டை நீக்கி வைக்க இந்திய அரசை வலியுறுத்துதல் | 61-91 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 61-67, 90 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 67-70 |
| திரு. உ. தனியரசு | 70-73 |
| *திரு. பி.வி. கதிரவன் | 74 |

பக்கங்கள்

**4. அரசினர் தனித் தீர்மானம்**—தொடர்ச்சி

இலங்கையில் நடைபெறவுள்ள காமன்வெல்த் கூட்டமைப்பு மாநாட்டினை இந்தியா முற்றிலும் புறக்கணித்து, இலங்கைத் தமிழர்கள் சிங்களர்களுக்கு இணையாக வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்வரை அக்கூட்டமைப்பிலிருந்து அந்நாட்டை நீக்கி வைக்க இந்திய அரசை வலியுறுத்துதல்—தொடர்ச்சி

*திரு. ரா. சரத்குமார் 74-75

டாக்டர் க. கிருஷ்ணசாமி 75-77

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா 77-80

திரு. கே. கோபிநாத் 80-81

திரு. எம். ஆறுமுகம் 81

*திரு. அ. சவுந்தரராசன் 82-83

*திரு. மு.க. ஸ்டாலின் 83-85

*திரு. ச. இராமச்சந்திரன் 85-89

**5. அரசினர் தீர்மானம்**—

விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் 91

**6. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)**—

தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013 92-94

*மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி 92, 93

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 95-104

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விஜய, ஐப்பசி 7, திருவள்ளுவர் ஆண்டு – 2044

## 2013 அக்டோபர் 24, வியாழக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

“குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.”

*என் குடிமக்களை உயர்த்துவேன் என்று மிகுந்த மன உறுதியுடன் முயற்சி செய்யும் ஒருவருக்குத் தெய்வமே வரிந்து கட்டிக் கொண்டு உதவி செய்வதற்காக அவர்முன் வந்து நிற்கும்.*

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**1—**

### தானியங்கி மின் கட்டண வசூல் இயந்திரம்

***19944—திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 அக்டோபர் 24

*(அ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர், வேளச்சேரி துணை மின் நிலையங்களில் தானியங்கி மின் கட்டண வசூல் இயந்திரம் (ATPM) அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவான்மியூர் மற்றும் வேளச்சேரி துணை மின் நிலையங்களில் தானியங்கி மின் கட்டண வசூல் இயந்திரம் அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மின் கட்டண வசூல் இயந்திரம் இன்னும் 5 மாதங்களில் நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.

**திரு. எம்.கே. அசோக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்று இரவு பகல் பாராமல் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், பாரதத்தின் வருங்காலப் பிரதமர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தென்சென்னை, வேளச்சேரி தொகுதியில் தானியங்கி மின் கட்டண வசூல் மையம் உருவாக்குவதற்கு ஒப்புதல் அளித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு வேளச்சேரி தொகுதி மக்களின் சார்பில் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு, இதனை சென்னைப் பெருநகரிலும் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் விரிவுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.



2013 அக்டோபர் 24]

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தானியங்கி மின் கட்டண வசூல் மையங்களை சென்னையில் அமைப்பது மட்டுமல்ல, தமிழகத்தின் மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருப்பதன் அடிப்படையில், 100 ATPM தானியங்கி வசூல் மையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. அதில் 24 ATPM மையங்கள் இப்போது செயல்பட்டு வருகின்றன. சென்னை தவிர, வேலூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில் இன்னும் 76 மையங்களில் இயந்திரங்கள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணிகளின் தேவையைக் கருத்தில் கொண்டு, இன்னும் இதனை அதிகமாக விரிவுபடுத்துவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது இயங்கி வருகின்ற 24 தானியங்கி மின் கட்டண வசூல் மையங்கள்மூலம் 32,000 நுகர்வோர்கள் பயன்பெற்று வருகிறார்கள். தானியங்கி மின் கட்டண வசூல் மையங்கள் தவிர, மின் கட்டணம் செலுத்துவதற்கு வசதியாக நுகர்வோர்களுக்கு இன்னும் பல்வேறு வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே இப்போது இணையதளம் மூலமாகவும், வங்கிகள் மூலமாகவும், தபால் அலுவலகங்கள் மூலமாகவும், கைப்பேசி மூலமாகவும்கூட மின் கட்டணம் செலுத்தி வருகின்றனர். இதற்காக 18 வங்கிகளுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு, இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்த நுகர்வோர்களில் ஏறத்தாழ 14 சதவிகிதம் நுகர்வோர்கள் இந்த வசதிகளைப் பெற்று வருகிறார்கள். இந்த வசதியினைப் பெறும் 14 சதவிகித நுகர்வோரை 50 சதவிகித அளவுக்குக் கூடுதலாக்க, இப்படிப்பட்ட எளிமையான முறையில் பணம் கட்டுகின்ற மையங்கள் அமைக்கும் நடவடிக்கைகளை விரிவுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டதன் பேரில், இப்பொழுது பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல, அவருடைய தொகுதியிலே உள்ள திருவான்மியூர், வேளச்சேரி ஆகிய பகுதிகளில் உள்ள துணை மின் நிலையங்கள் தவிர, சென்னையில், தில்லை கங்கா நகர் துணை மின் நிலைய வளாகம் மற்றும் பெசன்ட் நகர் துணை மின் நிலைய வளாகங்களில் தானியங்கி மின் கட்டண வசூல் மையங்கள் நிறுவுகின்ற பணிகளும்

இப்போது நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகளும் இன்னும் மூன்று மாத காலத்திற்குள் முடிவடைய இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, சென்னையிலே மட்டுமல்லாமல், மற்ற மாநகரப் பகுதிகளுக்கும் இந்தத் தானியங்கி மின் கட்டண வசூல் மையங்கள் விரிவுபடுத்தப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.

**திரு. எம்.கே. அசோக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**2—**

## பாதுகாக்கப்பட்ட குடிநீர்

***14651—திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு நகரத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.





(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு நகருக்கு தற்போது மதினாபள்ளி நீரேற்று நிலையம், சிறிய மின் விசைத் திட்டம், ஆழ்துளைக் கிணறுகள் ஆகியவற்றின்மூலம் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 64 லிட்டர் வீதம், மொத்தம் 3.20 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. 2012 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தொடங்கப்பட்டு, 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடிக்கும் வகையில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வரும் ரூபாய் 1,295 கோடி மதிப்பீட்டிலான வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம், பேரணாம்பட்டு நகராட்சிக்கு நாள் ஒன்றுக்கு, மேலும் 2.38 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் பேரணாம்பட்டு நகராட்சிக்கு நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு நிலைகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பேரணாம்பட்டில் வழங்கப்படுவதற்காகவும் தற்போது கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக பைப்புகள் புதைத்து, வேலை நடைபெறுவதற்காகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், பேரணாம்பட்டு ஒன்றியப் பகுதிகள் உப்பு நீரால் பாதிக்கப்பட்ட பகுதிகள். அந்த ஒன்றியத்தின் கிராமப் பகுதிகளில் இருக்கின்ற கால்நடைகளுக்குக்கூட தண்ணீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கின்றது. அங்கு இருக்கின்ற விவசாயிகள் குடிநீரை விலைக்கு வாங்கி கால்நடைகளுக்கு அளிக்கின்றார்கள். எனவே, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது ஒன்றியப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், பேரணாம்பட்டு

[2013 அக்டோபர் 24

நகராட்சிக்குத் தேவையான குடிநீர் பற்றித்தான் வினா எழுப்பியிருக்கிறார்கள். ஆனாலும்கூட, அவர் தொகுதி என்ற காரணத்தினால், ஒன்றியத்திற்கும் விரிவுபடுத்தப்படுமா என்று தற்போது துணை வினா எழுப்பியிருக்கிறார்கள். அதற்காகத்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, வேலூர் மாவட்டம் முழுவதற்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக, நீராதாரமுடைய காவேரி ஆற்றிலிருந்து நீரை எடுத்து வந்து வேலூர் மாவட்டத்திற்கு வழங்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தார்கள். அதன் அடிப்படையிலே கடந்த பிப்ரவரி திங்கள் 1,795 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள், இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பேரணாம்பட்டு ஒன்றியம், பேரணாம்பட்டு ஒன்றியத்தோடு இணைந்த 14 ஒன்றியங்களுக்கு உட்பட்ட 944 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றுக்கு குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்தப் பணிகள் 55 விழுக்காடு அளவுக்கு முடிவுபெற்றிருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியோடும், உத்தரவோடும் அடுத்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதிகளுக்கும் காவேரிக் குடிநீர் கிடைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு ஒன்றியப் பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்ற மாண்புமிகு அமைச்சருடைய பதிலுக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சி சார்பில் தொகுதிவாரியான ஓர் ஆய்வுக் கூட்டம் நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர், மேயர் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில்



2013 அக்டோபர் 24]

குடிநீரில் கழிவுநீர் கலப்பது சம்பந்தமாக அடையாளம் காட்டப்பட்டு, அதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. பொதுவாக இப்படி புகார் தெரிவிக்கும் நேரத்தில் மாநகராட்சி நிருவாகம் நடவடிக்கை எடுக்கிறது. ஆனாலும்கூட, நிரந்தரமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும். அதேநேரத்தில், குடிநீரில் சாக்கடை நீர் கலப்பதை நிரந்தரமாகத் தடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் பதில் மட்டுமே கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தாலும்கூட, ஒன்றைக் குறிப்பிட வேண்டியுள்ளது. கடந்த ஆட்சியில் இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் கொண்டுவரப்பட்டு, அந்தத் திட்டங்கள் முழுமையாக முடிக்கப்பட முடியாமல், ஒப்பந்தக்காரர்கள் பணி செய்யமுடியாமல், அவை நிலுவையில் இருந்தன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்புதான், மதுரை மாநகருக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக, தனிப்பட்ட முறையில் ஏற்கெனவே நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டம் ஒருபுறம் இருந்தாலும்கூட, தனிப்பட்ட முறையில் இவற்றையெல்லாம் சரிசெய்ய வேண்டுமென்பதற்காகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மதுரை மாநகராட்சிக்கு மட்டும் ஒருமுறை ஒதுக்கீடாக 250 கோடி ரூபாயைத் தந்து பணிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துகள் முழுவதும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, முழுமையாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

[2013 அக்டோபர் 24

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்ட மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை வறண்ட நேரத்தில், தாகம் தீர்க்கின்ற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆனால், இன்னும் பல கிராமங்களுக்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கிடைக்காத நிலை தொடர்கிறது. மேல்நிலைத் தொட்டிகளைச் சீராக்குதல், குழாய்களைப் பதித்தல் போன்றவற்றை சீர்செய்து, அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் கிடைக்க ஆவன செய்யப்படுமா என்பதையும், அதோடு இந்தத் திட்டத்தில் குழாய்கள் பதிப்பதற்கு குழி தோண்டப்பட்டதால், பழுதடைந்த அனைத்துச் சாலைகளையும் மேம்படுத்துவதற்கும், சீராக்குவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் நன்றியைக் கூறினார். அடுத்ததாக கோரிக்கையையும் பல இடங்களில் உள்ள பிரச்சினைகளையும் சொன்னார். அவர் பொதுவாகக் கூறியிருக்கிறார். ஏற்கெனவே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு, அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர்த் வழங்கப்பட்டிருக்கிறது. இது ஒரு மிகப் பெரிய திட்டம். இந்தக் குடிநீர்த் திட்டத்தில் மட்டும் இரண்டு மாவட்டங்களில் கிட்டத்தட்ட 6,928 கிலோ மீட்டர் தூரத்திற்கு குழாய்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப் பதிக்கப்பட்ட குழாய்கள், மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ஆகியவற்றின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டிருக்கிறது. இப்படிப் புதியதாக வழங்கப்படுகின்ற சூழ்நிலையில், பல்வேறு இடங்களில் சிறு, சிறு பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும். அந்தப் பிரச்சினைகள் முழுவதையும் நிவர்த்தி செய்து, விரைவாக அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சாலைகள் பழுதுபட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக பழுதுபட்டிருக்கின்றன. இல்லையென்று சொல்லவில்லை; ஏனென்றால், சாலையோரங்களில் பள்ளம் எடுத்து அந்தப் பகுதிகளில் மண் வாரிக் கொட்டுகின்றபோது, அந்தச் சாலைகள் பழுதடைகின்றன. பழுதடைந்துள்ள அந்தச் சாலைகளைச் சீராக்குவதற்கு எவ்வளவு செலவு செய்யப்படுகிறதோ, அந்த நிதி நெடுஞ்சாலைத் துறைக்கு நம்முடைய துறைகள்மூலம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் துறையும் இப்பணிகளை வேகமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 அக்டோபர் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சென்னை நகரில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் வழங்கப்படுகிறது. தண்ணீரை உரிய அழுத்தத்தோடு வழங்கமுடியாத நிலை இருக்கிறது. அதனால் சாக்கடை நீரும், குடிநீரும் சில இடங்களிலே கலந்து வருவதால், மக்களுக்குப் பிரச்சினை ஏற்படுகிறது. லாரிகள்மூலமும் பல பகுதிகளில் தண்ணீர் தரப்படுகிறது. இப்போது நீர்நிலைகளில் நீர் இருப்பு அதிகரித்துள்ள சூழ்நிலையிலே, தினந்தோறும் சென்னை நகருக்குக் கூடுதல் அழுத்தத்துடன் தண்ணீர் விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைக்கின்ற நேரத்தில், குற்றச்சாட்டையும் வைக்கிறார். முறையாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் சென்னை மாநகருக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே, வறட்சி அதிகமாக இருந்த சூழ்நிலை மாண்புமிகு உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். அதனடிப்படையில்தான், எல்லோருக்கும் சமமாக குடிநீர் வழங்கப்பட வேண்டுமென்பதற்காகதான், முறைப்படுத்தப்பட்டது.

[2013 அக்டோபர் 24

இப்போது நல்ல மழை பெய்திருக்கிறது. மழை பெய்ததன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற்றப்படுவதோடு, மக்களுக்கு எவ்வளவு தேவைப்படுகிறதோ, அந்தளவுக்கு குடிநீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆற்காடு வரையிலே விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஆரணியிலே மக்கள்தொகைப் பெருக்கத்தின் காரணமாக, தச்சூர், கமண்டல நாகநதி, ஆற்காடு போன்ற பகுதிகளிலிருந்து குடிநீர் பெற்றுக்கொண்டிருக்கிறோம். ஆற்காட்டிலிருந்து existing pipe line நீர் ஆரணி வரை இருக்கிறது. எனவே, ஆற்காடுவரை விரிவுபடுத்தப்பட்ட வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஆரணி பைப் லைனோடு இணைத்து, ஆரணிக்கும் பாதுகாக்கப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார். அந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இங்கே ஒரு கருத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஒரு திட்டத்தை அறிவிக்கின்றபோது, எந்தெந்தப் பகுதிகளுக்கு குடிநீர் செல்லுமோ, அந்தந்தப் பகுதிகள் முழுவதுமாக ஆராயப்பட்டு, அதற்காகத் திட்டம் வடிவமைக்கப்படுகிறது. அதற்காகத்தான் அந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு 1,295 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில்,



2013 அக்டோபர் 24]

எங்கெங்கெல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றதோ அங்கெல்லாம் அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, குடிநீர் வழங்கப்படும். புதியதாக இடம் கேட்கின்ற நேரத்தில், அந்தப் பகுதிகளைக் குறிப்பிட்டு நீங்கள் மனு கொடுப்பீர்கள் என்றால், அதைப் பரிசீலிக்கலாம். இது ஏற்கெனவே வரையறுக்கப்பட்டது— பேரணாம்பட்டுக்கு இப்போது தண்ணீர், கொடுக்கிறோம் என்றால், இப்போது 2.38 மில்லியன் லிட்டர் தண்ணீர் கிட்டத்தட்ட 23 இலட்சத்து 80 ஆயிரம் லிட்டர் தண்ணீர் அந்த நகராட்சி கொடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே வரையறுக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய பகுதிகள் குறித்து, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதில் சேர்க்கப்பட முடியுமா என்று ஆய்வு செய்து, சேர்க்கப்படுகின்ற நிலை வருகின்றபட்சத்தில் சேர்த்துவிடலாம். இல்லையென்றால், ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி அதன் மூலம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு குடிநீர் வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. ராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. க. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் தொகுதி, குன்னூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த ஆறு மாத காலமாக, கடும் வறட்சியின் காரணமாகக் குடிநீர் இல்லாமல் மக்கள் திண்டாடி வருகின்றார்கள். 15 நாட்களுக்கு ஒரு முறைதான் நகராட்சியின் மூலமாக அந்தப் பகுதி மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சுற்றியுள்ள பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவில் குடிநீர் ஆதாரம் இல்லாத நிலையில், தற்போது வெலிங்டன் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு உதகை பார்சன் வேலி ஏரியிலிருந்து குன்னூர் நகராட்சிக்குக் குடிநீர் கொண்டுவரப்பட்டுள்ளது. அதேபோல், எமரால்டு ஏரியிலிருந்து குன்னூர் நகரப் பகுதிக்குத் தண்ணீர் கொண்டுவர வாய்ப்புள்ளது. இந்தத் திட்டத்தினை ஆராய்ந்து, ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டமாக நிறைவேற்றி, குன்னூர் நகராட்சி சுற்று வட்டாரப் பகுதி மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்து தர இந்த அரசு முன்வருமா எனத் தங்கள்மூலம் கேட்க விரும்புகின்றேன்.

[2013 அக்டோபர் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாய்ப்பு கொடுக்கவில்லையென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியைக்கூட இங்கு கேட்டிருக்க முடியாது. இருந்தாலும்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து, ஏற்கெனவே ஒருசில திட்டங்கள் உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு வர இருக்கின்றன—அந்தப் பரிசீலனையின் அடிப்படையில் எப்படியெப்படியெல்லாம் செயல்படுத்த முடியுமோ, அப்படிச் செயல்படுத்த முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, உடுமலை அருகில் இருக்கும் திருமூர்த்தி மலையில் வாழக்கூடிய பழங்குடி மக்கள், ஆதிவாசி மக்கள், புலையர் இன மக்கள், ஏறக்குறைய 65 ஆண்டுகாலமாக இதுவரை குடிநீர், மின்சாரம், சாலை வசதி எதுவும் இல்லாமல் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். பக்கத்தில் ஆழியாறு அணை இருக்கின்றது; பார்க்கத்தான் முடிகின்றது; தண்ணீர் குடிக்க முடியவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையுடன் பரிசீலித்து, அந்தப் பகுதி செட்டில்மென்ட் கிராமமாக இருந்தாலும் சரி, வனத்தினுடைய ஆளுகைக்கு உட்பட்ட கிராமமாக இருந்தாலும் சரி, அடிப்படைக் கட்டமைப்புகளான குடிநீர் வசதி, மின்சார வசதி, சாலை வசதி செய்து தரவேண்டும் என்ற அடிப்படையிலே, இதுவரை குடிநீர் இல்லாமல் இருக்கின்ற மாவடாப்பு, குண்டல்பட்டி, குடுப்பட்டி போன்ற கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.



2013 அக்டோபர் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மலைப் பகுதி என்று சொல்லிவிட்டார். ஆனால், கீழே ஓடுகின்ற ஆற்றையும் சேர்த்து சொல்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது அந்த மலைவாழ் மக்களுக்கு இன்னும் பட்டாகூட கொடுக்கப்படவில்லை. எனினும், குடிநீர் ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும், அவற்றை விரிவுபடுத்தி தேவையான குடிநீர் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**3—**

## அடுக்குமாடிக் குடியிருப்புகள்

***7803—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் பேரூராட்சியில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.

[2013 அக்டோபர் 24

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் பேரூராட்சியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக 13-வது நிதிக் குழுத் திட்டத்தின்கீழ் 6 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் 112 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகிலத்தில் உள்ளவர்களெல்லாம் ஆச்சரியப்படுகின்ற அளவிற்கு, அகிலத்தில் உள்ளவர்களெல்லாம் அதிசயப்படுகின்ற அளவிற்கு, விழிகளை உயர்த்தி வியந்து பார்க்கின்ற அளவிற்கு, விழிகளை உயர்த்தி பாரே வியந்து பாராட்டுகின்ற அளவிற்கு, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு நொடியும், மக்களுக்காக அடுக்கடுக்கான திட்டங்களை அடுக்கிவரும் அம்மா அவர்களுடைய ஆட்சியில், அடுக்குமாடித் திட்டம் வேண்டும் என்று நான் சட்டமன்றத்திலே வினா எழுப்பி, வினா அவைமுன் வரும் முன்னரே திட்டம் தீட்டி, ஒப்புதல் வழங்கி, 6 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குப் பணிகள் மிக வேகமாக நடந்து கொண்டு வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் ஈடு இணையில்லாத தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பிலே கோடானுகோடி நன்றிகளையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றிகளையும் இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்வதோடு, இதுபோன்ற நல்ல பல திட்டங்களாலே, எங்கள் ஊரான இலுப்பூர், அம்மாவினுடைய ஆட்சியிலே இனிப்பூராக மாறியிருக்கிறது என்ற இனிப்பான செய்தியையும் பதிவு செய்து, நன்றி கூறி அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட அழகரசன் நகர், புதுவை காலனி, சத்தியா நகர் ஆகிய இடங்களில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகள்



2013 அக்டோபர் 24]

கட்டப்பட்டு கிட்டத்தட்ட 40, 50 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. சமீபத்திலேகூட அழகரசன் நகரிலே ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பின் நான்காவது மாடி இடிந்து விழுந்தது. அந்த 3 அடுக்குமாடிக் குடியிருப்புகளையும் அப்புறப்படுத்திவிட்டு, புதிதாக அப்பகுதி மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்துத் தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, ஆய்வு செய்து பழுது நீக்கக்கூடிய கட்டடமாக இருந்தால் பழுது நீக்கிக் கொடுக்கப்படும். இல்லையென்றால் அப்புறப்படுத்திவிட்டு, அங்கே புதிய வீடுகள் கட்டுவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். எனது மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் நகராட்சியில் 21-வது வார்டு, காந்தி நகர் பகுதியில் வாழும் மக்களின் நலனைக் கருதி, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் கட்டடம் கட்டித் தருவாரா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக 13-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாகவும், ஜவஹர்லால் நேரு வீட்டு வசதித் திட்டத்தின் வாயிலாகவும், ராஜீவ் காந்தி புனரமைப்புத் திட்டத்தின் வாயிலாகவும் வீடுகள் கட்டிக்

[2013 அக்டோபர் 24

கொடுக்கப்படுகின்றன. மூன்று பெரிய மாநகராட்சிகளில் மட்டும்தான் ஜவஹர்லால் நேரு வீட்டு வசதித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய நகராட்சியில் கேட்டிருக்கிறார்கள். 14-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கினால், அவருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட பந்தலூர் தாலுகாவில் அரசு அலுவலர்களுக்கென்று தனிக் குடியிருப்புகள் இல்லாததாலும், அதிக வாடகைக் கொடுத்து அவர்கள் தங்க வேண்டியிருப்பதாலும், அரசு அலுவலர்கள் பெரும்பாலும் அங்கு தங்குவதில்லை. ஆகையினால், அரசுப் பணிகளைச் சரியாகச் செயல்படுத்த முடியாமல் இருக்கிறது. எனவே, வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக அங்கே அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா?

மேலும், கூடலூரில் உள்ள 48 வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் அரசு அலுவலர்கள் குடியிருக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதையும் சரி செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இடத்தில் அரசு ஊழியர்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள், அந்த இடத்தில் மிக அவசியமாக பற்றாக்குறை இருக்கிறதா என்பதை ஆய்வு செய்து, தேவைப்பட்டால் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். கட்டடங்கள் பழுதடைந்து இருக்கின்றன என்று கூறியிருக்கின்றார். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பழுது நீக்குவதற்கு நிதி இந்த வருடம் ஒதுக்கியிருக்கின்றார்கள். ஆய்வு செய்து, அந்தப் பழுதை நீக்க



2013 அக்டோபர் 24]

வேண்டிய சூழ்நிலை இருக்கும்பட்சத்தில், நிச்சயமாகப் பழுது நீக்கித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, புதுப்பாளையம் பேரூராட்சியில் கடந்த ஆண்டே தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி வீடுகள் கட்ட கோரிக்கை வைக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வதாக உறுதியளித்திருக்கிறார்கள். எனவே, இந்த நிதியாண்டில் புதுப்பாளையம் பேரூராட்சியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா எனக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சி மற்றும் நகராட்சிகளில் 13-வது நிதிக் குழுவினுடைய நிதி ஒதுக்கீட்டில் வீடுகள் கட்டிக் கொண்டிருக்கின்றோம். மாநகராட்சியில் மட்டும்தான் ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின்கீழ் கட்டடங்களைக் கட்டிக்கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது பேரூராட்சிப் பகுதியாகும். அப்பணியினைச் செய்வதற்கு இப்பொழுது நிதி இல்லை. 14-வது நிதிக் குழுவினால் நிதி ஒதுக்கப்படும்போது, முன்னுரிமை அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தப் பேரூராட்சி எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**4—**

**கற்சிற்பக் கலைக் கூடம்**

***29398—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் கற்சிற்பக் கலைக் கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் மாமல்லபுரத்தில் தற்போது ஒரு கற்சிற்பக் கலைக் கூடம் இயங்கி வருகிறது. எனவே, புதுக்கோட்டையில் கற்சிற்பக் கலைக் கூடம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.

**திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்குத் தாயாய், தந்தையாய், ஆசானாய், தெய்வமாய், எல்லாமுமாக இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் திருவடியை வணங்குகிறேன். பாரம்பரியம், பண்பாட்டுச் சிறப்பு மற்றும் வரலாற்றுப் பின்னணியும்கொண்ட புதுக்கோட்டையில் வரும் நிதியாண்டிலாவது பிரத்யேக கற்சிற்பக் கலைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். கைவினைக் கலைஞர்கள் மேம்பாடு சிறக்க அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் கற்சிற்பக் கலைக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லையென்றாலும்கூட, புதுக்கோட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் கற்சிற்பக் கைவினைஞர்கள், கற்சிற்பக் கலைஞர்களுக்குத் தேவைப்படும் பயிற்சி, பயிற்சியில் ஈடுபட ஆர்வமுள்ள இளைஞர்கள், தயாரிக்கப்படும் கற்சிற்பங்களின் மதிப்பு, கற்சிற்பங்களுக்கான தேவை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, தேவையிருப்பின், புதுக்கோட்டையில் கற்சிற்பக் கலைக் கூடம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கைவினைஞர்களின் மேம்பாட்டுக்காக இந்த அரசு என்ன செய்கிறது என்கிற கேள்வியை இங்கே வைத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் முதன்முதலாக 1991-ல் பொறுப்பேற்றபோது, 1992-1993-லேயே உதவித் தொகையுடன்கூடிய ஒரு சிறப்பான பயிற்சியை, கைவினைஞர்களுக்கு அளிக்கக்கூடிய அளவில் ரூ.1,000 அளவிற்கு உபகரணங்களோடுகூடிய அந்தப் பயிற்சியை கற்சிற்பக் கைவினைஞர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கே வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய சிறப்பான திட்டங்களையெல்லாம் கைவினைஞர்களுக்குத் தருகிறவகையிலும், அவர்களை ஊக்குவிக்கின்ற வகையிலும், ரூ. 83 இலட்சம் செலவில் ஸ்ரீரங்கத்தில் 100 மகளிருக்கு ஒரு வருட பயிற்சியும், ரூ.30 இலட்சம் செலவில் 3 ஆண்டு, பயிற்சியும், விழுப்புரம் மாவட்டம் சின்னசேலத்தில் ஓர் ஆண்டு பயிற்சியும் அளிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் கைவினைஞர்களின் மேம்பாட்டுக்காக ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். மேலும், தமிழ்நாட்டில் கைவினைஞர்களின் பொருட்களை வெளிமாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் விற்பனை செய்யக்கூடிய வகையில், கைவினைஞர்களுக்கு உதவி செய்கிற வகையில், ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, அந்தக் கைவினைஞர்களுடைய பொருட்களுக்குச் சந்தை ஏற்படுத்துகிற

[2013 அக்டோபர் 24

வகையில், ரூ.2 கோடி நிதியை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.

**திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**5—**

## அங்கன்வாடி மையக் கட்டடம்

*__14351—திரு. ர.ம. பாபு முருகவேல்:__

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், நெசல் மற்றும் தென்றல் நகர் பகுதிகளில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றிம் நெசல் ஊராட்சியில், நெசல் நகர் மற்றும் தென்றல் நகர் என இரண்டு அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. நெசல் நகர் அங்கன்வாடி மையம் 1982 முதல் நெசல் நகர் உயர் நிலைப் பள்ளி வளாகத்தில் அரசுக் கட்டடத்தில் இயங்கி வந்தது. இம்மையத்தின் கட்டடத்தில் மேற்கூரை, தரை, ஜன்னல், கதவு, சுவர் விரிசல்



2013 அக்டோபர் 24]

போன்ற பெரிய பழுதுகள் ஏற்பட்டன. அந்தப் பெரிய பழுதுகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, ஊரக வளர்ச்சித் துறைமூலம் சரி செய்யப்பட்டு, தற்போது அங்கன்வாடி மையம் புதுப்பொலிவுடன் இயங்கி வருகிறது.

முற்பகல் 10-30

தென்றல் நகர் குறு அங்கன்வாடி மையம் 2007 முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இம்மையத்திற்குக் கட்டடம் கட்ட மாவட்ட நிருவாகத்துடன் இணைந்து நிலம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. நிலம் தேர்வு செய்யப்பட்டவுடன், கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 50 குழந்தைகளுக்குமேல் சென்றுவரக்கூடிய ஓர் அங்கன்வாடி மையம் அது. அதிலே மாவட்ட நிருவாகத்துடன் கலந்து இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பணியை விரைவுபடுத்தி, ஆதி திராவிடர்கள் வசிக்கக்கூடிய அந்தப் பகுதியிலே விரைவாக ஓர் அங்கன்வாடி மையத்தைக் கட்டித் தர வேண்டும். ஆரணி தொகுதியிலே அழகுசேணை, கொளத்தூர், ரெட்டிப்பாளையம், மோட்டூர், நடுப்பட்டு, ஏரிக்குப்பம், லாடப்பாடி, கள்ளேரிப்பட்டு, சிவசக்தி நகர், முணுக்கப்பட்டு, மேல்புத்தூர், மேல்மட்டை விண்ணமங்கலம் ஆதி திராவிடர் காலனி, மேல்நகரம்பேடு ஆதி திராவிடர் காலனி, வெங்கடேசன்பட்டி போன்ற பகுதிகளிலும் அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதையும் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்வரும் காலங்களில் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

[2013 அக்டோபர் 24

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதியிலே இருக்கிற மொத்த அங்கன்வாடி மையங்களையும் பெயரிட்டு மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்துவிட்டார். இருந்தாலும், மாவட்ட நிருவாகத்துடன் கலந்து பேசி, எந்தெந்த இடங்களில் அவசியத் தேவை ஏற்படுகிறதோ, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலமாக, அதை அந்த இடத்தில் கட்டித் தருவதற்குரிய ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய வழிகாட்டுதலின்படி, ஒரு வருடத்திற்கு மூன்று அங்கன்வாடி மையங்கள்தான் கட்டமுடியும் என்ற சூழ்நிலை இருக்கிறது. ஆனால், என்னுடைய தொகுதியிலே குறைந்தபட்சத் தேவையாக ஏறத்தாழ 18 அங்கன்வாடி மையங்கள் இருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், அரசு வழங்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியை 2 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தித் தருகின்றபட்சத்திலே, நிச்சயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய கட்டடங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டி முடிக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, நான் குறிப்பிட்ட பகுதிகளுக்கு, துரிதகால நடவடிக்கையாக, குறைந்தபட்சம் ஆதிதிராவிடர்கள் வசிக்கக்கூடிய பகுதிகளுக்காவது போர்க்கால அடிப்படையிலே அங்கன்வாடி மையங்களைக் கட்டித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டையே ஆண்டு கொண்டிருக்கக்கூடிய மத்திய அரசே 6 தொகுதிகளுக்கும் சேர்த்து 5 கோடி ரூபாய் தருகின்றபோது, (குறுக்கீடு) ரூ.5 கோடிதான், 6 கோடி ரூபாய் என்கிறார் அவர். நீங்கள் ஏன் தவறாகச் சொல்லிக் கொடுக்கிறீர்கள்? எப்போதுமே தவறாகவே பேசுவது திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பழக்கம். ஆகவே, இந்த முறையும் திசை திருப்புவதற்கு, நாங்கள் சரியான பதிலை சொல்லும்போது, நீங்கள் அதை திசை திருப்பப் பார்க்கிறீர்கள். (குறுக்கீடு) தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மனித நேயத்தோடு ஒரு தொகுதிக்கு 2 கோடி ரூபாய் என்று வழங்கிக் கொண்டிருப்பது, (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு பெரிய பெருந்தன்மையான எண்ணத்தோடு சட்டமன்ற உறுப்பினர்களின் விருப்புரிமையைத் தெரிந்துகொண்டு, பணி செய்ய வேண்டுமென்பதற்காக வழங்கிக் கொண்டிருக்கிற நிதி! இந்தக் குழந்தைகளின் கல்வி என்பது மிக, மிக முக்கியம். அந்த முக்கியத்துவத்தைக் கருதி, உங்களுடைய விருப்பத்தின் அடிப்படையிலே கோடிட்டுக் காட்டியிருக்கிற அத்தனை ஊர்களுக்கும் நீங்கள் கட்டடம் கட்டுவதற்கு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தங்களுடைய நிதியைத் தரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 அக்டோபர் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**6—**

## ஆவணங்களைப் பாதுகாத்தல்

***31788—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஆவணக் காப்பகங்களில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஆவணங்களைப் பாதுகாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2013 அக்டோபர் 24

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் ஆவணக் காப்பகங்களில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஆவணங்களைப் பாதுகாக்கும் முறை நடைமுறையில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களது அரசு 2011-2012 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ.40 இலட்சமும், 2012-2013 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ.40 இலட்சமும் ஒதுக்கித் தந்து, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

*முற்பகல் 10-35*

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றி, இந்தியாவில் முதன்மை மாநிலமாக இடம்பெறச் செய்ய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓய்வில்லாமல் உழைத்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, தமிழ்நாட்டில் ஆவணக் காப்பகம் 1909 இல் தொடங்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்துறையினையும் நவீனப்படுத்த, முன்னேற்றம் அடையச் செய்ய, ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறார்கள் என்பதை நான் அறிவேன். இக்காப்பகத்தில் பல்வேறு துறைகளின் ஆவணங்களும், மாவட்ட நீதிமன்ற ஆவணங்களும், தலைமைச் செயலகத்தின் 65 இலட்சம் ஆவணங்களும், வருவாய் வாரிய ஆவணங்களும் மற்றும் கி.பி. 1657 ஆம் ஆண்டுக்கு முந்தைய ஆவணங்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இக்காப்பகம் பழமையான, பாரம்பரியமிக்க, வரலாற்று ஆவணங்களைத் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாத்து, எதிர்காலச் சந்ததியினருக்குக் கொண்டு செல்ல வழிவகை செய்கிறது. இது பல்கலைக்கழகங்களுக்கு ஆராய்ச்சி மையமாகவும் பயன்படுகிறது. எனவே, சென்னையைத் தவிர, வேறு எங்கெங்கு ஆவணக் காப்பகங்கள் இயங்கி வருகின்றன என்பதையும், ஆவணங்களை எக்காலத்திற்கும் அழியாமல் பாதுகாப்பதற்கும் நவீன தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துவதற்கு, கட்டமைப்பு வசதிகள் அனைத்தையும் ஆவணக் காப்பகங்களில் ஏற்படுத்துவதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2013 அக்டோபர் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவணக் காப்பகங்கள் முறையாகச் செயல்பட்டு வருவதற்கும், இந்தியாவிலே இருக்கக்கூடிய அனைத்துக் காப்பகங்களிலே தமிழ்நாட்டின் ஆவணக் காப்பகத் துறை ஒரு முதன்மைத் துறையாக வர வேண்டுமென்பதற்கும் திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள்.*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னையைத் தவிர, வேறு எந்தெந்த இடங்களில் ஆவணக் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன என்று ஒரு வினாவை இங்கே எழுப்பியுள்ளார்கள். சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு எழும்பூரில் ஆவணக் காப்பகம் செயல்பட்டு வருகிறது. சென்னையைத் தவிர, கடலூர், கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய ஆறு மாவட்டத் தலைநகரங்களில் ஆவணக் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*மேலும், கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரையில், சென்னையில் நல்ல கட்டமைப்பு வசதியுடன் ஆவணக் காப்பகம் செயல்பட்டு வருகிறது. மாவட்டத் தலைநகரங்களைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் ஆவணக் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் அனைத்து அரசு அலுவலகங்களும் குறிப்பாக, வட்டாட்சியர் அலுவலகம், பதிவுத் துறை போன்றவற்றிலும் ஆவணங்களைப் பாதுகாக்க நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றி. இதுபோன்ற ஓர் ஆவணக் காப்பகம் திருநெல்வேலியில் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**7—**

## உலர் களம் அமைத்தல்

***6831—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, அகணி ஊராட்சியில் உலர் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, அகணி ஊராட்சியில் சிமென்ட் களம் அமைத்திட சீர்காழி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரைப்படி இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்நுழைவு அனுமதி பெறப்பட்ட பின்னர், சிமென்ட் களம் கட்டி முடிக்கப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

**திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் நுண்ணறிவும், நூதன சிந்தனைகளையும் தன்னுள் கொண்டு, தமிழக மக்கள் பயனுறும் பாதையினைப் பாங்குற அமைத்து, தடம் பார்த்து நடக்கும் சமுதாயத்தில் தடம் பதித்து, தமிழக விவசாயிகளின் விடிவெள்ளியாய், காவேரியை மீட்டெடுத்த பொன்னியின் செல்வியாய், (மேசையைத் தட்டும் ஒலி) வான்மழை மேகமாய், தரணி போற்றும் தன்னிகரில்லா தலைவியாய், பார் போற்றும் பாங்கான முதல்வராய் விளங்குகிறார்கள். சங்கத் தமிழ் பூமி தந்த எங்கள் சத்தியத் தாயே, திருவரங்கத்து சீதையே, ஈரடியால் உலகளந்த இறைவன் ஈந்திட்ட பேரறிவே, பார் வியக்கும் புதுமைப் பெண்ணே, அம்மா! பாரதம் இனி உங்கள் பின்னே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, அகணி ஊராட்சியில் உலர் களம் அமைக்கப்படும் என்ற பதிலை அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சீர்காழி தொகுதி, அகணி ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதி மக்கள் சுமார் 770 எக்டேர் நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார்கள். எனவே, அப்பகுதி விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையான உலர் களம் அமைப்பதற்கு ஏனாகுடி கிராமத்தில் களம் புறம்போக்கு இடம் உள்ளது. எனவே, சம்பா சாகுபடிக்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெற்று, உடனடியாக மாண்புமிகு அமைச்சர்

[2013 அக்டோபர் 24

அவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, உலர் களம் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா எனக் கேட்டு அமர்கின்றேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் உலர் களம் அமைப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் முன்நுழைவு அனுமதி விரைவில் பெறப்படும். அப்படி அனுமதி பெறப்பட்டவுடன், கூடிய விரைவில் அந்தப் பணி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் துறை மூலமாக விதைப் பொருள்கள் வழங்குவதற்கும், விவசாய உபகரணங்கள் வழங்குவதற்கும் வகை வகையாக வேளாண் துறை செலவு செய்வதைப்போல, உலர் களம் அமைப்பதற்கென்று நிதி வரையறுக்கப்பட்டுள்ளதா அல்லது அரசின் விருப்பத்திற்கேற்ப அந்த உலர் களம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

அடுத்து, விவசாயப் பகுதியாக இருக்கின்ற என்னுடைய திருவிடைமருதூர் தொகுதியில் திருப்பனந்தாள், கதிராமங்கலம், நாச்சியார்கோவில், துக்காச்சி ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் இருக்கின்றன. ஆனால், அங்கு உலர் களம் இல்லை. வரையறுக்கப்பட்ட நிதி இருந்தால், நான் குறிப்பிட்ட பகுதிகளில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உலர் களம் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.



2013 அக்டோபர் 24]

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் விற்பனைக் குழுமூலம் இந்த உலர் களம் அமைக்கின்ற பணி நடைபெற்று வருகின்றது. வேளாண் விற்பனைக் குழுவிற்கு அரசுக்குச் சொந்தமான நிலத்தையோ, தனியாருக்குச் சொந்தமான நிலத்தையோ அவற்றை விலையில்லாமல் அளிக்கும்பட்சத்தில், அந்தப் பகுதியில் பயிரிடப்படும் உணவு தானியங்கள் மற்றும் இதர பயிர்களின் பரப்பின் அடிப்படையில், தேவைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, புதிய சிமெண்ட் உலர் களங்கள் அமைக்க அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**8—**

## வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடம்

***28271—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் நாகர்கோவில் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இப்பணிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

[2013 அக்டோபர் 24

ரூ.1.50 கோடி நிதியுதவி செய்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 விழுக்காடு கல்வி அறிவு பெற்று, தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்க்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்தின் நீண்டநாள் கோரிக்கையான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகக் கூட்டம் கட்டித் தருவதற்குரிய ஏற்பாடு செய்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

500-க்கும் மேற்பட்ட நபர்கள் குடும்பத்தோடு, பிள்ளைகளோடு, வேலைவாய்ப்புக்காக பதிவு செய்ய வருவார்கள். அவர்கள் எல்லாம் வந்து காத்திருப்பதற்கு, அவர்களுடைய வாகனங்களை நிறுத்துவதற்கு, வெயிலானாலும், மழையானாலும் அவர்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு ஏற்ற வசதியான வகையில் தற்போது கட்டப்படுகின்ற வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடம் கட்டப்படுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

தற்போது வாடகைக் கட்டடத்திலே இயங்கிக்கொண்டு வரும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வசதி இல்லாத காரணத்தினால், 2011 மற்றும் 2012 காலகட்டத்திலே பதிவு செய்யமுடியாமல் உள்ளவர்களும் உண்டு. அப்போது பதிவு செய்யத் தவறியவர்களுக்கு மீண்டும் பதிவு மூப்பு அடிப்படையில் பதிவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 ஆம் நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, 10 மாவட்டங்களிலே வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அரசு சொந்தக் கட்டடம் கட்ட தலா



2013 அக்டோபர் 24]

ரூ.1.50 கோடி வீதம் ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நாகர்கோவில் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் கட்டடம் கட்டுவதற்கு வேலைவாய்ப்புத் துறையால் 6-1-2012-ல் அரசாணை வெளியிடப்பட்டு, அதனைத் தொடர்ந்து பொதுப் பணித் துறைமூலம் தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்று, பரிசீலனை செய்யப்பட்டு, இன்றைக்குப் பணிகள் முடிகின்ற தருவாயில் உள்ளன. இன்னும் ஒரு சில மாதங்களில் வேலைவாய்ப்புக் கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் அந்தக் கட்டடம் திறந்து வைக்கப்படும். கட்டடப்பட்டு வருகின்ற அந்தப் புதிய கட்டத்தில் வேலைவாய்ப்புக்காக பதிவு செய்ய வருகின்றவர்களுக்கு போதிய வசதிகளைச், சிறப்பாகச் செய்ய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி என்னவென்றால், தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வசதி இல்லாததால், 2011, 2012 ஆம் ஆண்டுகளிலே பதிவு செய்ய வந்தவர்கள் பதிவு செய்ய மறுக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி பதிவு செய்ய மறுக்கப்பட்டவர்கள், பதிவு மூப்பு அடிப்படையில், பதிவு செய்ய அனுமதிக்கப்படுவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை எந்தவொரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும், யாருக்கும் பதிவு செய்ய அனுமதி மறுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்

அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஏதேனும் மறுக்கப்பட்டிருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக் கூறினால், அதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**9—**

## இரயில்வே மேம்பாலம்

*__10312—திரு. அ. அஸ்லம் பாஷா:__

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் நகரம், பெத்லேகம் பகுதியில் இரயில்வே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் நகரம், பெத்லேகம் பகுதியில் இரயில்வே மேம்பாலம், வைப்பு நிதி அடிப்படையில் மாநில அரசின் நிதியின்கீழ் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெத்லேகம் பகுதியில் ஏறத்தாழ 40,000 மக்கள்





வசிக்கின்றார்கள். ஆம்பூர் நகர மக்களின் 40 ஆண்டு கால கோரிக்கை இது. இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படும் என்று சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரின்போது அறிவிக்கப்பட்டது. அந்தப் பகுதியில் அனைத்துச் சமுதாய மக்களும் ஒற்றுமையாக வசித்து வருகின்றார்கள். அந்த நகரத்திற்கான முக்கியக் கல்லூரியும் அந்தப் பகுதியில்தான் இருக்கின்றது; மருத்துவமனையும் அந்தப் பகுதியில்தான் இருக்கின்றது. மின்சார வாரிய அலுவலகமும் அந்தப் பகுதியில்தான் இருக்கின்றது. அதேபோல, ஆம்பூர் நகருக்குக் குடிநீர் ஆதாரமாக இருக்கக்கூடிய தடுப்பணையும் அந்தப் பகுதியிலே இருக்கின்றது. மழைக்காலங்களில் அந்தப் பகுதிக்குச் செல்வதற்கு வழி கிடையாது. ஆகவேதான், இதுகுறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதற்காக சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரின்போது, பெத்லேகம் பகுதியில் இரயில்வே மேம்பாலம் கட்டப்படும் என்ற நல்ல செய்தியையும் அறிவித்தார்கள். அதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மனித நேய மக்கள் கட்சியின் சார்பாகவும், அந்தப் பகுதியில் வசிக்கக்கூடிய மக்களின் சார்பாகவும் எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்று, இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு பெற்றுத் தந்து, அறிவிப்பு செய்த மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்தப் பகுதிக்குச் செல்வதற்கு வழி இல்லை என்கின்ற காரணத்தினால், வெகு விரைவில் அந்தப் பகுதியில் இரயில்வே மேம்பாலம் கட்டித் தரப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் ஒரு கோரிக்கையாக மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களிடத்தில் வைக்கின்றேன். எனது கோரிக்கையினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் செயல்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், ஆம்பூர்

[2013 அக்டோபர் 24

தொகுதி, ஆம்பூர் நகரத்தின் முக்கியப் பகுதியான பெத்லேகம் ரெட்டித் தோப்பு, கேஎம். நகர், ஆசனாம்பட்டு பகுதிக்குச் செல்வதற்கு இரயில்வே கடவு இல்லாத காரணத்தினால், இவ்விடத்தில், இரயில்வே மேம்பாலம் கட்டும் பணியைப் பணப் பகிர்வு அடிப்படையில் மேற்கொள்ள இயலாது என்று இரயில்வே துறை தெரிவித்துவிட்டதால், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு இதனைக் கொண்டு சென்று, அந்தப் பகுதியில் மேம்பாலம் கட்டுவதற்கான அவசியத்தைக் கருதி, மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியினைப் பெற்று, வைப்பு நிதி அடிப்படையில், மாநில அரசு நிதியின்கீழ் 30 கோடி ரூபாய் செலவில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. முதற்கட்டப் பணியான நிலம் கையகப்படுத்தும் பணியை மேற்கொள்ள தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட உண்ணாமலைக்கடை பேரூராட்சி, விரிகோடு பகுதியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதாலும், விபத்துகள் நிகழ்வதாலும் மற்றும் பல்வேறு தேவைகளின் அடிப்படையிலும் இரயில்வே மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும் என்று சென்ற கூட்டத் தொடரின்போது கோரியபோது, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையை ஏற்று, இரயில்வே மேம்பாலம் அமைத்துத் தரப்படும் என்று அறிவித்தார்கள். அதனடிப்படையில், தற்பொழுது 64 கோடி ரூபாய்க்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டிருக்கிறது. அதை விரைந்து பரிசீலனை செய்து, அனுமதி அளித்து, இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்கான பணிகளைத் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2013 அக்டோபர் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவையை இங்கே சுட்டிக்காட்டியுள்ளார்கள். அதில் விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களிடத்தில், மதுக்கூர் பகுதியிலுள்ள நெடுஞ்சாலைகள் சீர் செய்யப்பட வேண்டுமென்று கடந்த கூட்டத் தொடரின்போது நான் கோரிக்கை விடுத்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்து, நெடுஞ்சாலைகளைச் சீர் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள். அதற்காக எனது நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள, பட்டுக்கோட்டை நகருக்குள் இருக்கக்கூடிய பகுதிகள், குறிப்பாக மயில்பாளையம் பகுதி, தலையாறு தெரு பகுதி ஆகிய இடங்களில் உள்ள சாலைகள் பழுதடைந்துள்ளன. அதைச் சீர் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைப்படி எங்கெங்கெல்லாம் சாலைகளைச் சீரமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்றார்களோ, அந்தப் பகுதிகளையெல்லாம் ஆய்வு செய்து,

[2013 அக்டோபர் 24

நிதி நிலைமைக்கேற்ப அந்தச் சாலைகள் எல்லாம் சீரமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீர்மிகு ஆட்சி வந்ததற்குப் பிறகு, தொய்வடைந்து கிடந்த மதுரை பழங்காநத்தம் மற்றும் திருப்பரங்குன்றத்தில் இரண்டு மேம்பாலப் பணிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் நேரடிப் பார்வையில் விரைந்து முடித்து அவை மக்கள் பயன்பாட்டிற்கு வரக்கூடிய நிலையில் இருக்கின்றன. அதேபோல என்னுடைய திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி, திருமங்கலம் நகரத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கு அருகிலிருந்து விமான நிலையம் செல்லக்கூடிய சாலையில், இதே இரயில்வே வழியில்தான் அந்தப் பாலம் வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்துகொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த கோரிக்கையையும் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய கவனத்திற்கு எடுத்துச் சென்று, திருமங்கலம் நகரத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டித் தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், 24 மணி நேரத்தில் இரயில்வே கடவு மூடப்பட்டிருக்கும் நேரத்தில், இரயில்வே கடவை கடப்பதற்குக் காத்திருக்கும் வாகனங்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு, அதனை சராசரி அலகிட்டு, பின் ஒவ்வொரு வாகனத்திற்கும் அதற்கான புள்ளிகளை அளித்து, அதன்படி நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் இரயில்வே வாகன அலகுகளுக்குமேல் இருக்கும் இரயில்வே கடவில் மட்டுமே இரயில்வே மேம்பாலம், கீழ்பாலம் கட்டுவதற்கு இரயில்வே அமைச்சகம் ஒப்புதல் அளிக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த இரயில்வே கடவுகளில் ஒரு இலட்சம் வாகனங்களுக்குமேல் இருந்தால், அங்கே மேம்பாலம் கட்டுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான புள்ளிவிவரங்கள் எல்லாம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரு சக்கர வாகனங்கள் என்று சொன்னால், 0.5 புள்ளி என்றும், மூன்று சக்கர வாகனம் என்றால் ஒரு புள்ளி, சீருந்து என்றால் மூன்று புள்ளி, கனரக வாகனம் என்றால் ஆறு புள்ளி என்ற அடிப்படையிலே கணக்கிட்டு, ஒரு இலட்சம் இரயில்வே வாகன அலகுகளுக்குமேல் அந்த இரயில்வே கடவில் இருந்தால் அங்கே பாலம் கட்டுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2013 அக்டோபர் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர்-மேச்சேரி சாலையின் குறுக்கே உள்ள இரயில்வே லைனைக் கடந்து ஏராளமான வாகனங்கள் தினமும் மேட்டூருக்கு வந்து செல்கின்றன. அந்தவகையில் அந்தப் பகுதி தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாக இருப்பதாலும், போக்குவரத்து நெரிசல் அதிகப்படியாக இருக்கின்ற காரணத்தாலும், ஓமலூர்-மேச்சேரி சாலையில் இருக்கின்ற level crossing-ல் ஒரு பாலம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூரிலிருந்து மேச்சேரி செல்கின்ற சாலையிலுள்ள அந்த இரயில்வே கடவுக்குப் பதிலாக பாலம் கட்ட வேண்டுமென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டவாறு ஒரு இலட்சம் வாகன அலகுகளுக்குமேல் இருக்கும்பட்சத்தில், அங்கே இரயில்வே பாலம் கட்டுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**10—**

## சேமிப்புக் கிடங்கு

***11631—திரு. சி. சண்முகவேலு:**

*மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மடத்துக்குளம் தொகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் வட்டத்திற்கு என புதிய செயல்முறைக் கிடங்கு கட்ட பொருத்தமாக, வேடபட்டி கிராமம், புல எண் 160/1, 160/2 மற்றும் 160/3-ல் உள்ள இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான மூன்று ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, அந்நிலத்திற்கான அரசு நில மதிப்பீடு வட்டாட்சியர் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது. நில மதிப்பீடு பெறப்பட்டபின், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, கிடங்கு அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

**திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிதாக உருவாக்கப்பட்ட மடத்துக்குளம் தொகுதிக்கு சேமிப்புக் கிடங்கு கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்ட நிலையில் உள்ளது என்று கூறினார்கள். இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக அந்த இடம் கிடைப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுத்து, அங்கே புதிதாக சேமிப்புக் கிடங்கிற்குக் கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள மடத்துக்குளம் தாலுகாவில் உள்ள நியாய விலை அங்காடிகளுக்கு உடுமலைப்பேட்டை தாலுகா விநியோகக் கிடங்கிலிருந்து தற்போது அத்தியாவசியப் பொருட்கள் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன.*

*முற்பகல் 10-55*

*உடுமலைப்பேட்டை தாலுகா கிடங்கு 2,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்டதாகும். இதில் 1,500 மெட்ரிக் டன் உடுமலைப்பேட்டை தாலுகா அங்காடிகளுக்கும், 1,000 மெட்ரிக் டன் மடத்துக்குளம் தாலுகா அங்காடிகளுக்கும் என பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டு இயக்கம் செய்யப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியுடன், மடத்துக்குளம் தொகுதி, வேடபட்டி கிராமத்தில் புதிய கிடங்கு அமைந்தவுடன், தேவையான உணவுப் பொருட்களை மடத்துக்குளம் வட்டத்திலேயே சேமித்து வைத்து, விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

**திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. மடத்துக்குளம் தொகுதியானது, ஏற்கெனவே உடுமலைப்பேட்டை தொகுதியிலிருந்து பிரிந்த தொகுதி. உடுமலையிலே இருக்கக்கூடிய அந்தக் கிடங்கிலேயிருந்து*

மடத்துக்குளத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்றால், 22 கிலோ மீட்டர் பயணிக்க வேண்டியுள்ளது. மடத்துக்குளம் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே, மாண்புமிகு அம்மா அவர்களால், 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவிலே கட்டடம் கட்டப்பட்டுள்ளது. எனவே, போக்குவரத்துச் சிரமத்தைக் குறைக்கக்கூடிய வகையிலும், அந்த அங்காடியிலே இருப்பவர்களுக்குச் சிரமத்தைக் குறைக்கக்கூடிய வகையிலும், தற்போது தற்காலிகமாக வாடகை கொடுத்து, அந்த இடத்திலே கிடங்கு அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கிடங்கு மடத்துக்குளம் தாலுகாவில் கட்டி, அது பயன்பாட்டிற்கு வரும்வரையில், மாற்று ஏற்பாடாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று மடத்துக்குளம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடக் கிடங்கினை வாடகைக்கு எடுத்து, அத்தியாவசியப் பொருட்களை இருப்பு வைத்து, விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**11—**

## பால் குளிரூட்டும் நிலையம்

***4155—திரு. பி.வி. கதிரவன்:**

*மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*





*உசிலம்பட்டி தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உசிலம்பட்டி தொகுதியில் உற்பத்தியாகும் பால் முழுவதும் குளிரூட்டம் செய்யப்பட்டு, கையாளுவதற்குப் போதுமான உள்ளீட்டு வசதிகள் உள்ளதால், புதியதாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்திற்கேற்ப, பரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி விவசாயத்தைப் பின்னணியாகக் கொண்ட தொகுதி. அந்தப் பகுதியில் கால்நடைகள் அதிகம் உள்ளன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கறவை மாடுகள் வழங்கும் திட்டத்திலும் அங்கே கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த அடிப்படையிலும் அந்தப் பகுதியிலே பால் உற்பத்தி அதிகமாக இருக்கின்றது. அந்தப் பாலினை மதுரைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றால், 50 கிலோ மீட்டர், 60 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருப்பதால் காலை 3-00 மணி, 4-00 மணிக்கெல்லாம் பாலினைக் கறவை செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த அடிப்படையில், அந்தப் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் இருந்தால், மிகவும் வசதியாக இருக்கும். அதனால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். எனவே, அதனை விரைந்து செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2013 அக்டோபர் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதியில் 9 இடங்களில் தொகுப்புப் பால் குளிர்விப்பான்கள் இயங்கி வருகின்றன. இப்பகுதியில் கொள்முதல் செய்யப்படும் 36,381 லிட்டர் பால், இந்த 9 தொகுப்பு பால் குளிர்விப்பான்கள்மூலம் குளிர்விக்கப்பட்ட பின்னர், மதுரை பால் பண்ணைக்கு டேங்கர்மூலம் எடுத்துச் செல்லப்படுகிறது. மீதமுள்ள 27,793 லிட்டர் பால், பால் லாரிகள்மூலம் அருகிலுள்ள மதுரை பால் பண்ணைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. எனவே, உசிலம்பட்டி தொகுதியில் பால் கொள்முதல் அதிகரித்தாலும், அதனைக் கையாளத் தேவையான உட்கட்டமைப்பு வசதி அங்கு உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், உசிலம்பட்டி தொகுதியில் இ. புதுப்பட்டி கிராமத்தில் 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மொத்தக் குளிர்விப்பானும் மற்றும் அம்மூத்தம்பட்டி கிராமத்தில் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மொத்தக் குளிர்விப்பானும் புதிதாக நிறுவப்படவுள்ளன என்பதால், உசிலம்பட்டி தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதுபற்றி பரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 36,300 லிட்டர் பால் அங்கே உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; அந்தப் பகுதிக்குப் பக்கத்திலே கேரள மாநிலம் இருக்கின்றது. இங்கே உற்பத்திச் செய்யப்படும் பாலினை நாம் அங்கும் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். எனவே, அந்தப் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைந்தால், அங்கே கொண்டு செல்வதற்கு மிகவும் உதவியாக இருக்கும். அதனால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்துகொடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



2013 அக்டோபர் 24]

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்திற்கேற்ப பரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் கூட்டுறவு பால் உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தின் மூலமாக சுமார் பத்தாயிரம் லிட்டர் பால், விற்பனையாளர்கள்மூலம் கேனில் வைத்து விற்பனை செய்யப்படுகிறது. பால் குளிரூட்டும் கருவியும், போதிய இடவசதியும் உள்ளதால், வருகின்ற மகாமகத்தைக் கருத்தில்கொண்டும் தரமான கொழுப்பு மற்றும் புரதச் சத்துமிக்க ஆவின் பாக்கெட் பால் வழங்கும் வகையில் கும்பகோணத்தில் பால் பதனிடும் நிலையம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று, ஆய்வு செய்து, அதுகுறித்து பரிசீலனை செய்யப்பெற்று பதனிடும் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்

அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**12—**

## ஆய்வு மாளிகை

*8704—**திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதி, பரப்பலாறு அணையிலுள்ள ஆய்வு மாளிகையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒட்டன்சத்திரம் வட்டம், பரப்பலாறு அணையிலே உள்ள ஆய்வு மாளிகை பராமரிக்கப்படுமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். ஒட்டன்சத்திரம் வட்டம், பரப்பலாறு அணையிலே உள்ள ஆய்வு மாளிகை ஒவ்வோர் ஆண்டும் அணை பராமரிப்பிற்கென ஒதுக்கப்படும் நிதியில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், ஒட்டன்சத்திரம், பரப்பலாறு அணையைச் சீரமைக்க அணை பாதுகாப்புத் திட்டம் பகுதி-III-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அணை பாதுகாப்புத் திட்டத்திற்கான திட்ட மதிப்பீட்டில் ஆய்வு மாளிகையைச் சீரமைக்கவும் சேர்க்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.





**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரப்பலாறு அணை என்பது ஒட்டன்சத்திரம் நகரிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவிலே மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலே அமைந்துள்ளது. இந்த அணையின் அருகே கட்டப்பட்ட ஆய்வு மாளிகை மிகவும் பழுதடைந்துள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலில், அணை பாதுகாப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், நிதி கிடைத்தவுடன் பணி ஆரம்பிக்கப்படும் என்று கூறியுள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆய்வு மாளிகையை பழுதுபார்க்கத் தேவையான நிதியை ஒதுக்கி, உடனடியாகச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பரப்பலாறு அணை என்பது சுமார் 90 அடி உயரம் கொண்ட அணையாகும். அந்த அணையின் நீர் ஆதாரத்தை வைத்துத்தான் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு ஆண்டுதோறும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதோடுமட்டுமல்லாமல், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 30 ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்களும் இந்த அணையின் மூலமாகத்தான் நீர் பெற்று வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல், அந்த அணையின் மூலமாக சுமார் 2,500 ஏக்கர் விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்கிறது. அந்த அணை மலைப் பகுதியில் அமைந்திருக்கின்ற காரணத்தால் வண்டல் மண் 30 அடி வரை படிந்து, மழை பொழிகின்ற காலங்களில் அணையில் முழுவதுமாக நீரைச் சேமித்து, தேக்கி வைக்க முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அணையைத் தூர் வாரினால் ஒட்டன்சத்திரம் நகர மக்களுக்கு நிரந்தரமாகக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க ஏதுவாக இருக்கும். அதேபோல ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அனைத்து மக்களும் பயன்பெற வாய்ப்பு உள்ளது.

அந்த அணையின் மூலமாக வருகின்ற உபரி நீரால் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 10 குளங்கள் நிரம்ப வாய்ப்பு உள்ளது. பொதுமக்கள் நலன் கருதியும், விவசாயிகள் நலன் கருதியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அணையைத் தூர் வாருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 அக்டோபர் 24

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று முறை உறுப்பினராக இருந்திருக்கிறார். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இவற்றையெல்லாம் கேட்கவில்லை, செய்யவில்லை. இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்காமலேயே செய்து தருகின்ற ஆட்சி நடத்துகின்ற காரணத்தினாலே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்கள். நீங்கள் கேட்காமலேயே அந்த ஆய்வு மாளிகையைச் சீரமைக்க நிதி ஒதுக்கி, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். வருகின்ற காலங்களிலே அந்த அணையினைத் தூர் வாருவதற்கான நடவடிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் தொகுதியில், கொத்தயம் என்ற இடத்தில் நல்லதங்காள் என்ற அணை கட்டப்பட்டு வருகின்றது. அந்த அணையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட ஆறு மாதத்திற்கு முன்பு வந்து ஆய்வு செய்துவிட்டுப் போனார்கள். அந்த அணையைக் கட்டும் பணி சுமார் 80 விழுக்காடு முடிவடைந்து விட்ட நிலையில், தற்போது அந்தப் பணிகள் நடைபெறாமல் உள்ளன. அந்த அணைக்குத் தேவையான நிலத்தைக் கொடுத்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்காத காரணத்தினாலும், தற்போது மழை பெய்கின்ற காரணத்தினாலும் அந்தப் பணியில் தற்சமயம் சிறிது தொய்வு ஏற்பட்டுள்ளது. அணையைக் கட்டுவதற்காக நிலத்தைக் கொடுத்த விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்கி, அந்தப் பணிகளை விரைவாக முடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.



2013 அக்டோபர் 24]

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விரைவிலேயே அந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகைகளை வழங்கி, பணிகள் நடைபெற உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

## சமுதாயக் கூடம்

***18596—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, செங்கமலப்பட்டி ஊராட்சி, அருந்ததியர் காலனியில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், விருதுநகர் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த சிவகாசி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செங்கமலப்பட்டி ஊராட்சியில் ஆதி திராவிடர் மக்கள் அதிகமாகக் குடியிருந்தால், போதுமான இட வசதி இருப்பின், அதனை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதி நிலைமைக்கேற்ப அங்கே சமுதாயக் கூடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 அக்டோபர் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளத்தில் உண்மை ஒளி, வாக்கில் தெய்வ ஒளி, (மேசையைத் தட்டும் ஒலி) செயலில் மின்னல் ஒளி என தமிழக மக்களின் விடியல் ஒளியாய் கதிர் பரப்பும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அன்னைக்கு என் அன்பு வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து இல்லங்களிலும், தீபாவளி ஒளி பரப்பும் கந்தக பூமியின் மைந்தர்களாம் பட்டியலின மக்கள் 47 சதவிகிதத்திற்குமேல் வசிக்கும் பரந்த, விரிந்த ஊராட்சி செங்கமலப்பட்டி. பட்டாசு ஆலைகளில் பெருவாரியாகப் பணிபுரியும் 300-க்கும் அதிகமான அருந்ததியர் மக்கள் குடியிருக்கும் காலனி உள்ளது. அவர்களின் தேவைக்காக சமுதாயக் கூடம் அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கமலப்பட்டி ஊராட்சியில் தற்போதைய மொத்த மக்கள்தொகை 2,225 ஆகும். அதில் 1,485 ஆதி திராவிட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். மாமன்ற உறுப்பினர் குறிப்பிடும் இடத்தில், 126 அருந்ததியின சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வசித்து வருகின்றனர். ஆதி திராவிட மக்களின் பாதுகாவலராகத் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று (மேசையைத் தட்டும் ஒலி) சமுதாயக் கூடம் கட்டுவதற்குப் போதுமான இட வசதி இருப்பின், நிதி நிலைமைக்கேற்ப ஆய்வு செய்து, சமுதாயக் கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.



2013 அக்டோபர் 24]

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைப்புமிக்க பட்டியலின மக்கள் வாழும் மாவட்டம் விருதுநகர். இந்த விருதுநகர் மாவட்டத்தில் அமெரிக்காவின் Carter Center போல் வடிவமைத்து, நமது தாழ்த்தப்பட்ட சமுதாய படித்த இளைஞர்களுக்காக தொழில் முனைவோர் பயிற்சி மையம் E.D.C. விருதுநகரில் அமைக்கப்பட்டால் பாரதத்தில் முதல் முறையாக மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக அமையும். தாழ்த்தப்பட்ட படித்த இளைஞர்களுக்கென தாட்கோ மூலமாக விருதுநகரில் தொழில் முனைவோர் பயிற்சி மையம், அமைக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வியாக போடும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**14—**

## வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***32169—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளத்தில் பகுதிநேர வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.

[2013 அக்டோபர் 24

ஆலங்குளம் தாலுகாவில் 2,245 போக்குவரத்து வாகனங்களும், 34,825 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் மட்டுமே உள்ளன. இப்பகுதி மக்கள் ஓட்டுனர் உரிமம், புதிய வாகனங்கள் பதிவு ஆகிய சேவைகளைப் பெற அருகில் உள்ள தென்காசி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆலங்குளத்தில் தற்போது உள்ள வாகனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வட்டாரப் போக்குவரத்துப் பகுதி அலுவலகம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. வரும் ஆண்டுகளில் வாகனங்களின் எண்ணிக்கைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, வட்டாரப் போக்குவரத்துப் பகுதி அலுவலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றிலே எத்தனையோ முதல்வர்களை கண்டது நமது தமிழ்நாடு. ஆனால், தினம் தினம் கோடி கோடியாக, கோடிக்கணக்கில் திட்டங்களை அள்ளித் தந்த நம் மாண்புமிகு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களைப்போல் நம் தமிழகம் கண்டதும் இல்லை, இனி காணப்போவதும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றையதினம்கூட சென்னைப் பெருநகர மக்களுக்கு இதுவரை எந்த முதல்வரும் செய்யாத சாதனையாக, 50 சிற்றுந்துகளைத் துவக்கி வைத்து, ஏழையெளிய மாணவ, மாணவிகளுக்கு பள்ளி, கல்லூரி செல்ல போக்குவரத்து வசதி செய்து தந்த தாயே! தமிழகம் எங்கும் 610 புதிய பேருந்துகளைத் துவக்கி வைத்ததோடு மட்டுமின்றி (மேசையைத் தட்டும் ஒலி) போக்குவரத்துத் தொழிலாளர்கள் வாழ்வில் அவர்கள் ஓய்வு பெற்ற பின்பும் ஓய்ந்து போகாமல் இருக்க ரூபாய் 257 கோடிக்கு பணப் பயன்கள் வழங்கிய தொழிலாளர்களின் ஒளிவிளக்கே, எங்கள் அம்மாவே (மேசையைத் தட்டும் ஒலி) ஆலங்குளம் தொகுதிக்குப் புதிய போக்குவரத்துப் பணிமனை அமைத்துக் கொடுத்ததற்கு தங்கள் பொற்பாதம் வணங்குகிறேன்.



2013 அக்டோபர் 24]

ஆலங்குளம், கடையம், ஊத்துமலை, முக்கூடல் பகுதி மக்கள் தென்காசி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் செல்வதால் ஏற்படும் காலதாமதத்தினைத் தவிர்க்க ஆலங்குளத்தில் பகுதிநேர வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த அலுவலகங்களின் வாகனங்களுடைய எண்ணிக்கை உயர்வுகளுக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த இரண்டே ஆண்டுகளில் 6 புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களை வழங்கியும் (மேசையைத் தட்டும் ஒலி) 5 வட்டாரப் போக்குவரத்துப் பகுதி அலுவலகங்களை, வழங்கியும் வட்டாரப் போக்குவரத்துப் அலுவலகங்களாகத் தரமுயர்த்தியும், 18 புதிய பகுதி அலுவலகங்களை வழங்கியும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். ஆலங்குளம் பகுதியில் வாகனங்களுடைய எண்ணிக்கைக்கேற்ப, வரும் ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 அக்டோபர் 24

**15—**

## வீட்டுமனைப் பட்டா

*27854—திரு. ஏ. லாசர்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி ஒன்றியம், ஊஞ்சாம்பட்டி ஊராட்சியில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதி, தேனி ஒன்றியம், ஊஞ்சாம்பட்டி ஊராட்சியில் தகுதியான நத்தம் புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. நீர்நிலைப் புறம்போக்கு மற்றும் மயானம் ஆகிய தடை செய்யப்பட்ட புறம்போக்குகளில் குடியிருப்பவர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி ஊஞ்சாம்பட்டி கிராமம், அம்மஞ்சியில் 13 குடும்பங்கள் வண்டிப்பாதைப் புறம்போக்கில் 30 ஆண்டுகளாகக் குடியிருந்து வருகின்றனர். கடந்த காலங்களில் ஆக்கிரமிப்பு என்கிற தன்மையில் இவர்கள் அகற்றப்பட்டிருக்கின்றனர். பின்பு 15 ஆண்டுகள் கழித்து மீண்டும் வீடில்லாத அந்த மக்கள் அங்கே வீடு அமைத்திருக்கிறார்கள். வண்டிப்பாதைப் புறம்போக்கை வகைமாற்றம் செய்து கொடுக்கலாம் என்கிற நமது தமிழக அரசினுடைய உத்தரவின் அடிப்படையில் அந்த மக்களுக்கு இந்த வாய்ப்பு இருக்கிறது என்பதை அரசுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வருகிறேன். ஏனென்றால் அப்படி பல நடவடிக்கைகளைத் துவங்கியிருக்கிறார்கள். ஆனால் அரசினுடைய இந்த நல்ல நோக்கம் கீழே வேகமாக செல்லாததனுடைய விளைவாக, அந்த மக்களுக்கு காலத்தில் அந்தப் பட்டா கிடைக்காத நிலைமை தொடர்வதனால் இந்த அரசினுடைய இந்த நல்ல முடிவு, அந்தப் பகுதி மக்களுக்குக் காலத்தில் கிடைக்கின்ற விதத்தில் செய்தால், வீடில்லாத அந்த மக்களுக்குப் பட்டா கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்பதால் அதை அரசு செய்ய முன்வர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



2013 அக்டோபர் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுக்குப் பட்டா வழங்கவேண்டுமென நாம் கவலைப்படுவதைக் காட்டிலும் பல மடங்கு அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் எங்கெல்லாம் பட்டாக்களைக் கொடுக்க முடியுமோ அங்கெல்லாம் அவற்றை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் முதல்வர் அம்மா அவர்களுடைய அரசின் இலக்கு, வருடம் ஒன்றிற்கு ஒரு இலட்சம் பட்டாக்களை வழங்க வேண்டுமென்பது. 5 ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 5 இலட்சம் பட்டாக்களை வழங்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயித்திருக்கிறது. ஆனால் இரண்டரை ஆண்டுகள்கூட ஆகாத நிலையில் தமிழகத்திலே வாழக்கூடிய அனைத்துத் தரப்பு மக்களுக்கும் 4 இலட்சத்து 50 ஆயிரம் பட்டாக்களை வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) வருவாய்த் துறையில் இந்தியாவுக்கே முன்னோடி மாநிலமாகச் சாதனை படைக்கின்ற ஆட்சியாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஊஞ்சாம்பட்டி

[2013 அக்டோபர் 24

கிராமம், புல எண் 11-ல் 5 குடிசைகள் இருக்கின்றன. இவற்றில் ஒரு குடிசையிலே டீக்கடை வைக்கப்பட்டிருக்கிறது. மற்ற 4 குடிசைகளில் இதுவரை எவரும் குடியிருக்கவில்லை. இந்த இடம் காளியம்மன் கோயில் வண்டிப்பாதை என வகைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பட்டாக்கள் வழங்கப்பட்ட பின்னாலே ஆறு மாத காலத்திற்குள் அதில் குடியிருப்பு அமைத்துக்கொள்ள வேண்டுமென்பது அரசினுடைய விதி. ஆனால் பட்டாக்கள் வழங்கப்பட்டு இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகியும்கூட அந்த இடத்திலே யாரும் குடியிருப்புகள் அமைக்காத நிலை இருக்கின்ற காரணத்தினாலே மாண்புமிகு உறுப்பினர் கோரிய மேற்படி இடத்திற்குப் பட்டாக்கள் வழங்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனுடைய நிலைகுறித்து விளக்கியிருக்கிறார்கள். என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். அது பாதைப் புறம்போக்காக இருப்பதனாலும், கடந்த கால நெருக்கடியினாலும் பயமுறுத்தலின் காரணமாகவும் சிலர் அங்கே குடியேறாமல் இருந்திருக்கலாம். அதையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு துணைக் கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் தென்கரை கல்லுப்பட்டி பஞ்சாயத்தில் 30, 35 ஆண்டுகாலமாக பெரியார் நகரிலுள்ள கிராம நத்தத்தில் 225 ஆதி திராவிட குடும்பங்கள் குடியிருக்கின்றன. அவர்களுக்கு அரசால் வழங்கப்பட்ட நிலத்திற்கு 35 ஆண்டு காலமாகப் பட்டா கிடைக்கவில்லை. அதேபோல, அதே தென்கரை கல்லுப்பட்டி பஞ்சாயத்து, வெங்கடாசலபுரம் கிராமத்தில் அரசு கிராம நத்தத்தில் 852 பேர் குடியிருக்கிறார்கள். அங்கே தலித் மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் குடியிருக்கிறார்கள். இவர்கள்



2013 அக்டோபர் 24]

நீண்டகாலமாகப் பட்டா கோரியும் கிடைக்கப்பெறாத நிலையில், குறிப்பாக ஆதி திராவிட நலத் துறையைச் சார்ந்த அதிகாரிகள், மாவட்ட தாலுகா அதிகாரிகள், நீண்டகாலமாகக் குறைந்த கால சர்வீசில் இருப்பதனால், தலித் மக்களுக்குக் கொடுக்கக் கூடிய அந்த ஆதி திராவிட நத்தத்திற்கு உடனடியாகப் பட்டா வழங்குவதில் கூடுதல் கவனம் செலுத்தாததன் விளைவாக அரசின்மீதுகூட தேவையில்லாத விமர்சனங்கள் வருகின்றன. அரசு அதைப் பரிசீலித்து, 35 ஆண்டு காலமாக அரசு வழங்கிய நிலத்திலே பட்டா கிடைக்காத மக்களுக்குப் பட்டா கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், அரசையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் புறம்போக்காக இருக்கின்றபட்சத்திலே தேவைப்படுகின்ற இடங்களிலெல்லாம் உடனடியாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பட்டாக்களை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அப்பகுதி, ஆதி திராவிட மக்கள் குடியிருக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, ஆதி திராவிட நலத் துறையின் மூலமாக அரசு நத்தம் புறம்போக்காக இருந்தால் உடனடியாகப் பட்டா வழங்குவதற்குண்டான நடவடிக்கைகளை அரசு எடுக்கும். தனியார் நிலங்களாக இருந்தால், பேச்சுவார்த்தை மூலமாக அரசு நிர்ணயித்த தொகையைத் தனியாரிடத்திலே செலுத்தி, அந்த இடத்தை ஆதி திராவிடர் நலத் துறை மூலமாகக் கையகப்படுத்தி பட்டா வழங்குவதற்குண்டான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2013 அக்டோபர் 24

## 2. அறிவிப்புகள்

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் 7-வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக* (Panel of Chairmen) *நியமிக்கிறேன்:*

*திரு. அ. பாப்பா சுந்தரம்*

*திரு. ஆர்.பி. உதயகுமார்*

*திரு. கே.பி. அன்பழகன்*

*திரு. ஆர். சின்னசாமி*

*திரு. பி.ஜி. நாராயணன்*

*திரு. சு. குணசேகரன்*

## 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்”.*

*எனக் கோருகிறேன்.*



2013 அக்டோபர் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*

*மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.*

*முற்பகல் 11-20*

## 4. அரசினர் தனித் தீர்மானம்

### இலங்கையில் நடைபெறவுள்ள காமன்வெல்த் கூட்டமைப்பு மாநாட்டினை இந்தியா முற்றிலும் புறக்கணித்து, இலங்கைத் தமிழர்கள் சிங்களர்களுக்கு இணையாக வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்வரை அக்கூட்டமைப்பிலிருந்து அந்நாட்டை நீக்கி வைக்க இந்திய அரசை வலியுறுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009 ஆம் ஆண்டு இலங்கை உள்நாட்டுப் போர் உச்சகட்டத்தில் இருந்த நிலையில், சர்வதேச சட்டம் மற்றும் ஜெனிவா ஒப்பந்தத்தில் உள்ள போர் விதிமுறைகளை முற்றிலும் மீறி, இலட்சக்கணக்கான அப்பாவி இலங்கைத் தமிழர்களைக் கொன்று குவித்து ஓர் இனப் படுகொலையை இலங்கை அரசாங்கம் நடத்தியது.*

இலங்கை அரசின் இந்த இனப் படுகொலையையும், ஈவு இரக்கமற்ற இழிசெயலையும், மனிதாபிமானமற்ற தன்மையையும், மனிதநேயமற்ற நடவடிக்கையையும், இலங்கைத் தமிழர்களை அழிக்க இந்திய அரசு ஆயுதங்கள் வழங்கியது மற்றும் பயிற்சிகள் அளித்த நடவடிக்கையையும் நான் ஆரம்பத்திலிருந்து எதிர்த்து வந்திருக்கிறேன். இலங்கை அரசின் அராஜகச் செயலைக் கண்டித்து தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள், மாணவ-மாணவியர், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், கலைத் துறையினர் என அனைத்துத் தரப்பினரும் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், உண்ணாவிரதம் எனப் பல்வேறு போராட்டங்களை நடத்தினர். இலங்கை நாட்டிற்கு எதிராக உலகம் முழுவதிலிருந்தும் கண்டனக் குரல்கள் எழுப்பப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் நியமனம் செய்யப்பட்ட குழு தனது ஆய்வில், பரவலாக குண்டுமழை பொழிந்து அப்பாவி மக்களைக் கொன்று குவித்தது; மனிதர்கள் வாழும் இடங்களின்மீதும், மருத்துவமனைகள்மீதும் குண்டுகளை வீசியது; மனிதாபிமான முறையில் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்ய மறுத்தது; உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகப்படக் கூடியவர்கள் உட்பட இந்தச் சண்டையில் பலியானவர்கள் மற்றும் எஞ்சியுள்ளவர்கள்மீது மனித உரிமை மீறல்கள் நிகழ்த்தியது; இலங்கை அரசை விமர்சிப்பவர்கள் மற்றும் ஊடகங்கள் உட்பட போர்ப் பகுதிக்கு வெளியே இருப்பவர்கள்மீது மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியது உட்பட பல்வேறு கடுமையான குற்றங்களை இலங்கை அரசு நிகழ்த்தியுள்ளதாகத் தெரிவித்தது.

இந்தச் சூழ்நிலையில் 2011 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான், அப்பாவி இலங்கைத் தமிழர்கள்மீது ஈவு இரக்கமற்ற முறையில் தாக்குதல் நடத்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும், இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும், தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பி சிங்களர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகைசெய்யும் வரையில், அனைத்துக் குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில்,



மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின்மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரும் தீர்மானத்தினை 8-6-2011 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முன்மொழிந்தேன். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் இந்த மாமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. ஆனால், இந்தத் தீர்மானத்தின்மீது இது நாள்வரை இந்திய அரசு எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து இலங்கை இராணுவ வீரர்களுக்குத் தமிழ்நாட்டில் பயிற்சி அளிக்கவும், சிங்களர்கள் தமிழ்நாட்டில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளவும், மத்திய அரசு அனுமதி வழங்கியது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததோடு, இலங்கை இராணுவ வீரர்களுக்கு, இந்தியாவில் எங்கும் பயிற்சி அளிக்கக்கூடாது என்று நான் பாரதப் பிரதமருக்கு கடிதங்கள் எழுதினேன். இதன் விளைவாக, தமிழ்நாட்டில் இலங்கை இராணுவ வீரர்கள் பயிற்சி பெறுவது ரத்துச் செய்யப்பட்டது.

இருப்பினும், இலங்கை அரசு அங்கு வாழும் தமிழர்களுக்குத் தேவையான மறுவாழ்வுப் பணிகளைச் சரிவர மேற்கொள்ளவில்லை என்றும், தமிழர்கள் இரண்டாம் தர குடிமக்களாகக் கருதப்படுவது தொடர்கிறது என்றும் தகவல்கள் வரப்பெற்றன. இதுமட்டுமல்லாமல், தமிழர்கள்மீது நிகழ்த்தப்பட்ட கொடுமைகள் குறித்து புதிய ஆதாரங்களை ஊடகங்கள் வெளியிட்டன. இதன் காரணமாக ஒட்டுமொத்த தமிழ்நாடே கொதித்தது.

இதனைத் தொடர்ந்து, 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கை நாட்டில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டினை வேறு நாட்டிற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும் என்றும், இலங்கையில் நடைபெறும் இந்த மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது என்றும் தெரிவித்து 25-3-2013 அன்றே கடிதம் வாயிலாக, மாண்புமிகு பாரதப் பிரதமரை நான் கேட்டுக்கொண்டேன்.

முற்பகல் 11-25

இது மட்டுமல்லாமல், 27-3-2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், இலங்கை நாட்டை “நட்பு நாடு” என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும், இலங்கை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 அக்டோபர் 24

இனப் போரின்போது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன் விசாரணை நடத்திடவும், இந்த சர்வதேச விசாரணையின் அடிப்படையில் போர்க் குற்றம் நிகழ்த்தியவர்கள் சர்வதேச நீதிமன்றம் முன்பு நிறுத்தப்பட்டு, அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத் தந்திடவும், தமிழர்கள் மீதான அடக்குமுறையை இலங்கை அரசு நிறுத்தும்வரை இலங்கை நாட்டின்மீது பொருளாதாரத் தடையை விதித்திடவும், ஈழத் தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்தில்கொண்டு தனி ஈழம் குறித்து இலங்கைவாழ் தமிழர்களிடமும், இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்திடவும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தினைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்னும் அரசினர் தீர்மானத்தினை நான் முன்மொழிந்தேன். அது இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதன்மீதும் மத்திய அரசு எவ்விதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில், தமிழக மக்களின் உணர்வுகள் உட்பட, அனைத்துக் காரணிகளையும் பரிசீலித்து, இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் தான் கலந்துகொள்வது குறித்து ஒரு முடிவு எடுக்கப்படும் என்று பாரதப் பிரதமர் தெரிவித்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வந்துள்ளன. இந்த காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று தமிழக மக்கள் வலியுறுத்தி வரும் சூழ்நிலையில், மாண்புமிகு பாரதப் பிரதமர் தன்னுடைய பங்கேற்பு பற்றி மட்டும் கருத்துத் தெரிவித்துள்ளது தமிழக மக்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

காமன்வெல்த் நாடுகளின் தலைவரான இரண்டாம் Queen Elizabeth அவர்களால் காமன்வெல்த் நாளான 11-3-2013 அன்று கையெழுத்திடப்பட்ட காமன்வெல்த் சாசனத்தில், மனித உரிமைகள் என்ற தலைப்பின்கீழ், "We are committed to the Universal Declaration of Human Rights and other relevant human rights covenants and international instruments. We are committed to equality and respect for the protection and promotion of civil, political, economic, social and cultural rights including the right to development for all, without discrimination on any grounds as the foundation of peaceful, just and stable societies. We note that these rights are universal, indivisible, interdependent and inter-related and cannot be implemented selectively.



2013 அக்டோபர் 24] [செல்வி ஜெ ஜெயலலிதா]

We are implacably opposed to all forms of discrimination whether rooted in gender, race, colour, creed, political belief or other grounds" என்று கூறியுள்ளார்.

அதாவது, மனித உரிமைகள் குறித்த பொதுவான பிரகடனம், இதர தொடர்புடைய மனித உரிமைகள் குறித்த உடன்பாடுகள் மற்றும் இதர சர்வதேச ஆவணங்கள் ஆகியவற்றைப் பின்பற்றுவதில் உறுதியாக இருக்கிறோம் என்றும், அமைதி, நியாயம் மற்றும் நிலையான சமூகங்கள் ஆகியவற்றின் அடிப்படையாக விளங்கும் வளர்ச்சி உரிமை உட்பட சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார சம உரிமைகளைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் வழிவகுக்கும் சம உரிமை மற்றும் கண்ணியத்தை எவ்வித பாகுபாடுமின்றி அனைவருக்கும் வழங்கவும் உறுதி பூணுகிறோம் என்றும், இந்த உரிமைகள் அனைத்தும் பொதுவானவை, பிரிக்க முடியாதவை, ஒன்றுக்கொன்று சார்புடையவை, ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்றும், இதில் சிலவற்றை மட்டும் தெரிந்தெடுத்து செயல்படுத்த முடியாது என்றும் காமன்வெல்த் சாசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாலினம், இனம், நிறம், மதம், அரசியல் நம்பிக்கை அல்லது வேறு காரணங்களுக்காக ஏற்படுத்தப்படும் வேறுபாடுகளைக் கடுமையாக எதிர்க்கிறோம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், இந்தக் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் முற்றிலும் முரணாக இலங்கை அரசு செயல்பட்டு வருகிறது.

காமன்வெல்த் நாடுகளின் முக்கியமான கொள்கைகளையும், கோட்பாடுகளையும் நிலைநிறுத்த முன்வராத இலங்கை நாட்டில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் தான் கலந்துகொள்ளப் போவதில்லை என்று கனடா நாட்டு பிரதமர் அறிக்கை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் காமன்வெல்த் கூட்டமைப்பு தொடர்ந்து உகந்த வகையில் திகழ வேண்டுமென்றால் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் மனித கண்ணியத்தை மதித்தல் போன்ற அடிப்படைக் கொள்கைகளின் அஸ்திவாரத்தில் அமைக்கப்பட்ட காமன்வெல்த் அமைப்பு அவற்றை நிலைநிறுத்த வேண்டும் என்று கனடா நம்புகிறது. கனடா நாட்டு மக்களால் பெரிதும் போற்றப்படும் காமன்வெல்த் நாடுகளின் இந்த முக்கியக் கொள்கைகளை நிலைநிறுத்த இலங்கை அரசு தவறிவிட்டதால்,

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 அக்டோபர் 24

கனடா நாட்டு பிரதமர் என்ற முறையில் இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் தான் கலந்துகொள்ளப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறார்.

*முற்பகல் 11-30*

அதாவது, "Canada believes that if the Commonwealth is to remain relevant it must stand in defence of the basic principles of freedom, democracy and respect for human dignity, which are the very foundation upon which the Commonwealth was built. It is clear that the Sri Lankan Government has failed to uphold the Commonwealth's core values which are cherished by Canadians. As such, as the Prime Minister of Canada, I will not attend the 2013 Commonwealth Heads of Government Meeting in Colombo, Sri Lanka" என்று கனடா நாட்டுப் பிரதமர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

அவருக்குப் பதிலாக வெளியுறவுத் துறை அமைச்சரின் நாடாளுமன்றச் செயலர் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் மிகக் குறைவாக வசிக்கும் கனடா நாடே இது போன்றதொரு முடிவை எடுத்து பெயரளவில் ஒருவரை அனுப்பவுள்ள சூழ்நிலையில், எட்டு கோடி தமிழர்கள் வசிக்கும் இந்தியா இந்த மாநாட்டில் பெயரளவிலும் கலந்து கொள்ளாது என்னும் தீர்க்கமான முடிவை (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இன்னமும் எடுக்காதது துரதிர்ஷ்டவசமானது. தமிழர்களின் உணர்வுகளுக்கு மத்திய அரசு சிறிதும் மதிப்பளிக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

இவற்றை எல்லாம் சுட்டிக்காட்டி, நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டினை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்றும், பெயரளவிற்குக்கூட ஒருவரும் அந்த மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடாது என்றும் தெரிவித்து, இதுபோன்ற நடவடிக்கை இலங்கைத் தமிழர்கள்மீது நியாயமான அணுகுமுறையை இலங்கை அரசு எடுக்க வழிவகுக்கும் என்றும் கோடிட்டுக்காட்டி, ஒரு விரிவான கடிதத்தினை நான் பாரதப் பிரதமருக்கு 17-10-2013 அன்று எழுதியுள்ளேன். தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் இதே கோரிக்கையினை வலியுறுத்தி வருகின்றன. எனினும் மத்திய அரசு இந்தப் பிரச்சினை தொடர்பாக ஒரு திடமான, தீர்க்கமான முடிவை இன்னமும் எடுக்கவில்லை.



2013 அக்டோபர் 24] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ஒட்டுமொத்த தமிழக மக்களின் கோரிக்கைக்கு மேலும் வலு சேர்க்கும் வகையிலும், தமிழக மக்களின் உணர்வுகளைத் தெரிவிக்கும் வகையிலும், கீழ்க்காணும் தீர்மானத்தினை நான் முன்மொழிகிறேன்:

**தீர்மானம்**

"தமிழக மக்களின் ஒருமித்த கருத்திற்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளித்து இந்த ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை நாட்டில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டினை இந்தியா முற்றிலுமாகப் புறக்கணிக்க வேண்டும் என்றும்; பெயரளவிற்குக்கூட இந்திய நாட்டின் சார்பாக பிரதிநிதிகள் அந்த மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடாது என்றும்; இது குறித்த இந்தியாவின் முடிவை உடனடியாக இலங்கை நாட்டிற்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும்; இலங்கைத் தமிழர்கள் சுதந்திரமாகவும், சிங்களர்களுக்கு இணையாகவும் வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்வரை காமன்வெல்த் கூட்டமைப்பில் இருந்து இலங்கை நாட்டை தற்காலிகமாக நீக்கி வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் இந்தியப் பேரரசை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது". (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தினை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தத் தீர்மானத்தில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும் ஒருமித்த கருத்து உள்ளதால் உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைச் சுருக்கமாகக் கூறக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

*முற்பகல் 11-35*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகளாவிய 10 கோடி தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மொழியாய், அவர்கள் கண்ணீர் விடுகிறபோதெல்லாம் அந்தக் கண்ணீரைத் துடைக்கும் கரங்களாய், அவர்களுடைய

உரிமைகளுக்குக் குரலாய், ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்தின் வடிவமாய் வாழ்ந்துகொண்டிருக்கின்ற போற்றுதலுக்குரிய நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே கொண்டு வந்திருக்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அரசினர் தனித் தீர்மானத்தை வரவேற்பதிலே நாங்கள் நெஞ்சமெல்லாம் நிறைவடைகிறோம்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏதோ இன்றைக்கு ஓர் அரசியல் நோக்கோடு இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறார்கள் என்று யாரும் கருதிவிடமுடியாது. எப்போதெல்லாம் இலங்கைத் தமிழர்கள் கண்ணீர் விடுகிறார்களோ, அப்போதெல்லாம் இந்திய, தேச இறையாண்மைக்கும் இந்திய தேசியத்திற்கும் ஓர் இலக்கணமாய்த் திகழ்ந்துகொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற வகையிலே ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நம்முடைய தமிழ் உணர்வாளர்கள் ஒருபோதும் மறந்துவிட முடியாது. அந்த வகையிலே, அடுத்த மாத இறுதியிலே இலங்கையிலே நடக்க இருக்கின்ற காமன்வெல்த் மாநாட்டிற்கு இந்தியா எந்த வகையிலும் பிரதிநிதிகளை அனுப்பக்கூடாது என்ற வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள். எப்படி ராஜபக்சேவை போர்க் குற்றவாளி என்று பிரகடனப்படுத்த வேண்டுமென்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டு வந்தார்களோ, எப்படி இலங்கையின்மீது பொருளாதாரத் தடை ஏற்படுத்த வேண்டுமென்ற வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானத்தை இந்த அவையிலே முன்மொழிந்தார்களோ, அதைப்போல ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை இந்த அவையிலே அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். இதை வரவேற்பதில் எங்களுக்கெல்லாம் பெருமை.

ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டும், ஜனநாயகத்தை வளப்படுத்த வேண்டும், ஜனநாயகத்தைச் செழுமைப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் காமன்வெல்த் என்கிற ஓர் அமைப்பே உருவாக்கப்பட்டது. காலனி ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டும், எங்கும் சர்வாதிகாரம் இருக்கக்கூடாது, எங்கும் இராணுவ ஆட்சி இருக்கக்கூடாது, ஜனநாயக நாடுகள் மலர வேண்டும் என்கிற



காரணத்திற்காக உருவாக்கப்பட்ட காமன்வெல்த் அமைப்பின் மாநாடு, ஜனநாயகத்தைப் படுகுழி தோண்டி புதைத்துக்கொண்டிருக்கின்ற ஒரு மண்ணிலே நடக்கிறது. அதை எதிர்த்து இன்று குரல் எழுப்பியிருக்கின்றார் உலக வீராங்கனை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே காமன்வெல்த் மாநாடு நடக்கக்கூடாது, இந்தியா அதிலே பங்கேற்கக்கூடாது, இது இன்றைக்குத்தான் நடக்கப்போகின்ற ஒரு முன்னுதாரணம் இல்லை. ஏற்கெனவே, கனடா பங்கேற்கப் போவதில்லை. பல சந்தர்ப்பங்களிலே பங்கேற்பதில்லை. தற்காலிகமாக இலங்கையை காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்தே தள்ளி வைக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்குச் சொல்கிறாரே அதுதான் ஜனநாயகத்தின் உச்ச இலக்கணம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே, பாகிஸ்தானிலே இராணுவ ஆட்சி இருந்தபோது பாகிஸ்தானை நாம் காமன்வெல்திலிருந்து நீக்கி வைத்திருக்கிறோம். ஏற்கெனவே, பிஜி தீவிலே இராணுவ ஆட்சி இருந்தபோது பிஜி தீவை காமன்வெல்திலிருந்து நாம் நீக்கி வைத்திருக்கிறோம்.

இலங்கைக்குப் பயணம் செய்த ஐ.நா. மனித உரிமை கவுன்சிலுடைய மனித உரிமை மீறல் ஆணையர் திருமதி நவநீதம் பிள்ளை அவர்கள் 'இங்கே சர்வாதிகாரத்திற்கான அனைத்துக் கூறுகளும் இருக்கின்றன' என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். திருமதி நவநீதம் பிள்ளை அவர்கள் அங்கே மனித உரிமை மீறல் இருக்கிறது, சர்வாதிகாரத்திற்கான கூறுகள் இருக்கின்றன, ஜனநாயகத்தின் அடிப்படைக் கூறுகள் மறுக்கப்பட்டிருக்கின்றன என்று மிகத் தெளிவாக அந்த மண்ணிலேயே பத்திரிகையாளர்களுக்கும், செய்தியாளர்களுக்கும் சொல்லியிருக்கிறார்கள். இதைவிட வேறு ஒன்றும் தேவையில்லை. அங்கேயிருக்கின்ற பல பத்திரிகையாளர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நீண்ட விளக்க உரைக்குப் பிறகு அதைப் பாராட்டுவதும், வாழ்த்துவதும் மட்டும் செய்யமுடியும். அந்த விஷயத்தின் உள்ளே நான் போக விரும்பவில்லை. ஒருவேளை அங்கே காமன்வெல்த் மாநாடு நடத்தப்பட்டால்--நடக்கும்--ஏற்கெனவே உள்ள மரபுபடி இனிமேல் காமன்வெல்த் மாநாட்டினுடைய தலைவராகவே அதிபர் ராஜபக்சே தேர்ந்தெடுக்கப்படுவார். எந்த நாட்டில் காமன்வெல்த் மாநாடு நடைபெறுகிறதோ அந்த நாட்டினுடைய அதிபர்

காமன்வெல்த் அமைப்புக்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவது மரபு. இனி காமன்வெல்த் அமைப்புக்கு அவர்தான் தலைவர் என்றால்--கள்வனையே காவலுக்கு வைப்பது என்று நம்முடைய கிராமத்தில் பழமொழி சொல்வார்களே அதைப்போல் அல்லவா அமைந்துவிடும்?

இந்தத் தேதியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்களே, அதுவே அவரின் உலகளாவிய சிறப்புக்கு ஓர் இலக்கணம். இன்றைக்குத்தான் இலங்கை வடகிழக்கு மாகாணத்தின் முதல் சட்டப் பேரவைக் கூட்டம் அங்கே தொடங்குகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கை வடகிழக்கு மாகாண முதல் கூட்டம் இன்றைக்கு அங்கே தொடங்குகிறது. அவர்களுக்கு வலிமை சேர்க்கின்ற வகையிலே, அங்கே ஜனநாயகத்தை நிலைநிறுத்துகின்ற வகையிலே இத்தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். காவல் துறைக்கும் அங்கே அதிகாரம் இல்லை, நில நிருவாகத்திற்கும் அதிகாரம் இல்லை. காவலும் இல்லாமல், நில நிருவாகமும் இல்லாமல் அங்கே ஒரு மாநில ஆட்சியின் முதல் சட்டப் பேரவைக் கூட்டம் இன்றைக்குத் தொடங்க இருக்கிறது அப்படிப்பட்ட சூழ்நிலையிலே--அவர்களுக்கு வலுசேர்க்கின்ற வகையிலே, உலக ஜனநாயகத்திற்கு வலுசேர்க்கின்ற வகையிலே, ஜனநாயகத்தின் தாயாக விளங்கிக் கொண்டிருக்கின்ற தமிழக முதலமைச்சர் போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தனித் தீர்மானத்தை வாழ்த்தி, வரவேற்று, பாராட்டி அமைகிறேன். உலகத்திற்கு முன்னுதாரணமான தீர்மானமாக இது அமையும், அமையும் என்று சொல்லி வாழ்த்துகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனப் படுகொலையை நடத்திய இலங்கை மண்ணில் காமன்வெல்த் மாநாட்டை நடத்தக் கூடாது, அந்த மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது, இந்தியா பெயரளவிற்குக்கூட பங்கேற்கக் கூடாது, இன்னும் சொல்லப்போனால், இலங்கையை





காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து தற்காலிகமாக நீக்கி வைக்க வேண்டும் என்கிற ஓர் அழுத்தமான தீர்மானம், உலகம் முழுக்க பரவி வாழ்கின்ற ஒட்டுமொத்த மக்கள் சமூகத்தினுடைய, தமிழ் சமூகத்தினுடைய ஜனநாயக சக்திகளினுடைய உணர்வுகளை, உலகம் முழுக்க ஜனநாயக சக்திகள் வியந்து பார்த்து, நவீன மானுட சமூகத்தினுடைய உணர்வுகளை, ஜனநாயக உணர்வுகளை, சுதந்திர உணர்வுகளை, குடியாட்சி உணர்வுகளை உலகத்திற்கு நவீன காலத்திலே அழுத்தமாகப் பதிவு செய்து வருகிற தமிழகத்தின் 7 கோடிக்கு மேற்பட்ட தமிழ்ச் சமூகத்தினுடைய ஒப்பற்ற ஆட்சித் துறைத் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானம் உலகத் தமிழர்களினுடைய தீர்மானம், மட்டுமல்ல; உலக ஜனநாயக சக்திகளுக்கு வேண்டுகோள் வைக்கின்ற தீர்மானத்தை நம்முடைய தமிழக சட்டசபையிலே இன்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பது மிக, மிக அவசியமான ஒன்று. தமிழ்ச் சமூகத்திற்கு நம்பிக்கையைத் தருகிற ஆட்சித் துறை தலைவராக தமிழகத்திலே நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றார்கள் என்கின்ற அந்த நிலையையும் உறுதி செய்கின்றது இந்தத் தீர்மானம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு குறிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 14-வது சட்டமன்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு, உலகத்திலேயே யாரும் இலங்கையை, குறிப்பாக ராஜபக்சேவை ஒரு போர்க் குற்றவாளி என்றோ, இலங்கையை இனப் படுகொலை செய்த நாடு என்றோ, அவ்வளவு அழுத்தமாக, அவ்வளவு விளக்கமாக, காரண காரியங்களோடு ஒப்பிட்டுச் சொன்னதில்லை என்ற அளவுக்கு, இதே சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டு வந்து இலங்கைமீது பொருளாதாரத் தடை வேண்டும், ராஜபக்சேவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும், தனி ஈழம்தான் தீர்வு; தமிழ் மக்களினுடைய சுதந்திர ஜனநாயக வாழ்வுக்கு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று முழங்கினார்கள், ஜனநாயகத்தின்மீது பற்றுகொண்டிருக்கின்ற எங்கள் தமிழ்ச் சமூகத்தினுடைய ஆண்மையுள்ள ஒப்பற்ற ஒரே தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த பிறகுதான் உலகத்திலே ஐ.நா. சபையிலேகூட இதுகுறித்து விழிப்பு கொண்டு இலங்கைக்கு

[திரு. உ. தனியரசு] [2013 அக்டோபர் 24

எதிரான தீர்மானங்களை மனித உரிமை அவையிலே கொண்டுவந்தார்கள். இந்தியா இலங்கைக்கு ஆதரவாக இருப்பதைக் கண்டித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலங்கையின்மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, ஐ.நா. சபை மன்றத்தின் வாக்கெடுப்பிலே அவர்கள் பங்கேற்கக் கூடாது எடுத்த முயற்சியின் காரணமாகத்தான் தமிழர்கள் ஓரளவு தன்னிறைவும், பாதுகாப்பும் பெற்றார்கள். உலகத்திலே இந்த நவீன காலத்திலே, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இப்படிப்பட்ட ஓர் இனப் படுகொலை நடந்தது கிடையாது. கல்லும் மண்ணும் தோன்றுவதற்கு முன்பு தோன்றியது தமிழ்ச் சமுதாயம், நேர்மை, உண்மை, மான மரியாதையுடன் வாழ்ந்த அச்சமூதாயத்தை ஈவு இரக்கமில்லாமல் அழித்து குழந்தைகளை, பெண்களை, முதியவர்களை உலகமே பதைபதைக்கக் கொன்ற காட்சிகளைப் பார்த்த பிறகும் கோடிக்கணக்கான மானிட சமூகத்தினர் தன்னுடைய உயிரைத் தந்து, பெற்றுத் தந்த தனி மனித உரிமையை ஜனநாயகத்தை விடுதலையைப் போற்றும் சுதந்திர உலகத்தில், நவீன சமூகத்தில், அத்தகைய இனப் படுகொலை நடந்த அதே மண்ணிலே அந்தக் காமன்வெல்த் மாநாடு நடைபெறுவது ஒட்டுமொத்த ஜனநாயக உணர்வுகளுக்கே எதிரானது. அப்படிப்பட்ட ஈவு இரக்கமில்லாத அந்த நாட்டில் அந்த மாநாட்டை நடத்துவதற்கு இந்தியா துணை நிற்கிறது என்பதுதான் விந்தை. இன்று மகாத்மா காந்தி இருந்திருந்தால், உண்மையாக காந்தியைப் போல் இலங்கையைக் கண்டித்திருப்பதற்கு யாரும் இருந்திருக்க முடியாது. உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று சொல்லப்படுகின்ற இந்தியாவே, இலங்கைக்கு ஆதரவாக இனப் படுகொலை நடந்த அந்த மண்ணிலே காமன்வெல்த் மாநாடு நடைபெறுவதற்கு துணை நிற்பதைக் கண்டிக்கின்ற வகையில் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இந்த வலிமையான தீர்மானத்தை மட்டும் அவர்கள் கொண்டுவரவில்லை. இதே காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று கடந்த மார்ச் மாதம் 25 ஆம் தேதி கூறினார்கள். அக்டோபர் மாதம் 17 ஆம் தேதி இந்தியப் பிரதமருக்குக் கடிதமும் எழுதினார்கள். இந்தந்த காரணங்களுக்காக இனப் படுகொலை நடந்த இலங்கை நாட்டிலே நடைபெறும் மாநாட்டிலே இந்தியா பங்கேற்கக் கூடாது. கனடா பங்கேற்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி அம்மா அவர்கள் கவனமாக கடிதத்தின்



2013 அக்டோபர் 24] [திரு. உ. தனியரசு]

மூலமாக பிரதமர் அவர்களுக்குச் சொன்னார்கள். இப்போதும் தமிழர்களினுடைய நலனுக்காக, இன்னும் கவனமாகச் சொல்கிறார்கள், சிறந்த ஜனநாயகவாதியான அம்மா அவர்கள். இந்தச் சூழ்நிலையில் தமிழகத்தில் அரசியல் கட்சிகள் போராட்டம் நடத்துகின்றன. மாணவர் அமைப்புகள் போராட்டம் நடத்துகின்றன. ஒட்டுமொத்த தமிழ் மக்களினுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, இந்தியா இந்த மாநாட்டில் பங்கேற்கக் கூடாது என்று மிகவும் கவனமாகக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

*முற்பகல் 11-45*

அந்தக் கடிதத்தைப் பாருங்கள். உலகத்தில் எந்த ஜனநாயகவாதியும் இந்தக் காலகட்டத்தில் அப்படி ஒரு கடிதத்தை எழுத முடியாது. அவ்வளவு மென்மையாக, அவ்வளவு சரியாக அந்த வாதத்தைச் சொல்லிவிட்டு, இன்னமும் சொல்கிறார்கள்; தமிழகத்தினுடைய அனைத்து அரசியல் கட்சிகளினுடைய கருத்து, ஒட்டுமொத்த மக்களினுடைய கருத்து. ஆகவே இந்தக் கருத்திற்கு மதிப்பளித்து, இந்தியப் பேரரசு இலங்கையில் நடைபெறவிருக்கின்ற காமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்காமல், அதை புறக்கணிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இதைவிட நாம் என்ன செய்ய முடியும். ஜனநாயக நாட்டில் வாழ்கிற, ஒரு ஜனநாயக அமைப்பில் இருக்கிற, நாம் இதைவிட என்ன செய்ய முடியும்? இந்தக் கருத்தைத்தான் நாம் வலிமையான இந்தத் தீர்மானத்தின் வாயிலாக வெளிப்படுத்த இருக்கிறோம். தமிழகத்தில் இருக்கிற, உலகம் முழுவதும் இருக்கிற தமிழ்ச் சமூகத்தினுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, ஜனநாயக சமூகங்களினுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, இனப் படுகொலை நடைபெற்று வருகின்ற இலங்கை நாட்டில் காமன்வெல்த் மாநாடு நடைபெறக் கூடாது, அதிலே இந்தியா பங்கேற்கக் கூடாது என்றும், இந்தியா பங்கேற்கக் கூடாது என்பது மட்டுமல்ல, காமன்வெல்த் அமைப்பிலிருந்தே இலங்கையை தற்காலிகமாகவாவது நீக்கிடல் வேண்டுமென்றும் மாண்புமிகு தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இன்று முன்மொழியப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

[2013 அக்டோபர் 24

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நவம்பர் மாதம் நடைபெற இருக்கின்ற காமன்வெல்த் மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் இலங்கையை காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து தற்காலிகமாக நீக்க வேண்டுமென்ற முக்கியமான தீர்மானத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே முன்மொழிந்திருக்கின்றார்கள். உலகத்தில் வாழ்கின்ற ஒட்டுமொத்த தமிழர்களின் மனதில் ஓடுகின்ற எண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற வகையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை இன்றையதினம் சட்டமன்றத்திலே கொண்டு வந்திருப்பதை அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மனமார வரவேற்கின்றது. அதுமட்டுமல்ல, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தில் மூன்றாவது முறையாக முதல்வராக வந்தவுடன் இலங்கை அரசுக்கும், ராஜபக்சேவுக்கும் எதிராக இதே தமிழக சட்டமன்றத்தில் தீர்மானங்கள் கொண்டு வந்து நிறைவேற்றி, அதை இந்தியப் பேரரசுக்கு அனுப்பியும்கூட இன்னும் செவிசாய்க்க மறுத்து வருகிறது காங்கிரஸ் ஆட்சி. இந்தக் காமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டுமென்று இன்றையதினமும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்ப இருக்கின்றோம். இங்கே ஒட்டுமொத்த தமிழர்களும், தமிழகத்தில் இருக்கின்ற ஒட்டுமொத்த கட்சிகளும் ஒன்றுசேர்ந்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குப் பாடுபடத் தயாராக இருக்கிறோம். அதேநேரத்தில் இந்தத் தீர்மானத்திற்கு மதிப்பளித்து காமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிப்பதில் ஆணித்தரமாக இருக்க வேண்டுமென்று காங்கிரஸ் அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல முறை மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியும்கூட அதைப் புறக்கணித்து வருகிறார்கள். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்தத் தீர்மானத்தை எங்களது அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சி மனமார வரவேற்று, வாழ்த்துகிறது. நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

***திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க பல தீர்மானங்களை முன்மொழிந்து நிறைவேற்றச் செய்திருக்கிற மாண்புமிகு



2013 அக்டோபர் 24] [திரு. ரா. சரத்குமார்]

முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள், இன்றையதினம் ஒரு சிறந்த தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தில் முக்கிய சாராம்சமாக, எந்த ஒரு தலைவரும் எடுக்க முடியாத அளவிற்கு, ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமென்றால், “There is no leader in this country to take such decisive decision in bringing out a Resolution”, என்ற வகையில் இங்கே விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இலங்கைத் தமிழர்கள் சுதந்திரமாகவும், சிங்களருக்கு இணையாகவும் வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்வரை காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து இலங்கை நாட்டைத் தற்காலிகமாக நீக்கிவைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று எந்த ஒரு தலைவரும் சொல்லியிருக்க முடியாது. இப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்மானத்தை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்ததை அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்று அமர்கின்றேன். காமன்வெல்த் அமைப்பைப் பற்றியும், அந்த அமைப்பில் சொல்லப்பட்டிருக்கின்ற சாராம்சத்தைப் பற்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்தையும் சுருக்கமாக, சிறப்பாக எடுத்து வைத்திருக்கிறார்கள். நேரம் அதிகம் இல்லாத காரணத்தினால், இந்தத் தீர்மானம் நிச்சயமாக உலகளவில் அனைவராலும் வரவேற்கப்படும் என்பதை மட்டும் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கக்கூடிய அரசினர் தனித் தீர்மானத்தை புதிய தமிழகம் கட்சியின் சார்பாக நான் முதற்கண் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2008-2009 ஆம் ஆண்டுகளில் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்தேறிய மனித உரிமை மீறல்கள், சர்வதேச அளவில் ஒரு சுதந்திரமான விசாரணை ஆணையத்தின்மூலம் விசாரிக்கப்பட வேண்டுமென்று உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் மக்கள் மட்டுமல்ல, ஜனநாயகத்தை நேசிக்கின்ற நாடுகளெல்லாம் குரல்

கொடுத்துவருகின்ற இந்த நேரத்தில், இலங்கையில் காமன்வெல்த் மாநாடு நடைபெறுவதும், அதைத் தொடர்ந்து ராஜபக்சே காமன்வெல்த் அமைப்பினுடைய தலைவராகப் பொறுப்பேற்கிற வாய்ப்பும், இலங்கையில் வாழக்கூடிய ஈழத் தமிழ் மக்களுடைய வாழ்வுரிமையை எதிர்காலத்தில் நிச்சயமாகப் பாதிக்கும். எனவே, அப்படி ஒரு வாய்ப்பை ராஜபக்சேவுக்கு தந்துவிடக் கூடாது என்ற அடிப்படையில், எந்தக் காரணத்தைக்கொண்டும், நவம்பரில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது; இந்தியாவினுடைய பிரதமர் மட்டுமல்ல, இந்திய அரசின் சார்பாக ஒரு சாதாரண பிரதிநிதிகூடக் கலந்துகொள்ளக் கூடாது என்ற அடிப்படையில், இன்று இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் ஆகும். ஏற்கெனவே இதே அவையில், இதே காரணத்திற்காக ராஜபக்சேவை போர்க் குற்றவாளியாக அறிவிக்கவேண்டும் என்றும், அதுகுறித்து சர்வதேச, சுதந்திர விசாரணை ஆணையம் விசாரிக்கவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதனைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் இன்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை உலகெங்கும் வாழக்கூடிய தமிழ் மக்கள் நிச்சயமாக வரவேற்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். பாரதப் பிரதமர் அவர்கள் ஏற்கெனவே இதுகுறித்து குறிப்பிட்டிருந்தாலும்கூட, இன்று நிறைவேற்றப்படுகின்ற தீர்மானத்தையொட்டி நிச்சயமாக இந்த மாநாட்டிலே கலந்துகொள்ளப்போவதில்லை என்ற அறிவிப்பை நாம் நிச்சயம் எதிர்பார்க்கலாம். அதைத்தான் இந்திய அரசும் செய்யும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

அதேபோல, இடைப்பட்ட காலத்திலே இலங்கை அரசை காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து விலக்கி வைக்கவேண்டுமென்ற ஓர் ஆணித்தரமான வாதத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுத்துவைத்திருக்கிறார்கள். எனவே, இந்திய அரசு, கடந்த காலங்களைப்போல, நாம் நிறைவேற்றிய அனைத்துத் தீர்மானங்களையும் உதாசீனப்படுத்தியதைப்போல நடந்துகொள்ளாமல், நிச்சயமாக உலகெங்கும் வாழக்கூடிய 8 கோடிக்கும் மேற்பட்ட தமிழ் மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு காமன்வெல்த் மாநாட்டிலே கலந்துகொள்வதிலிருந்து





நிச்சயமாக விலகி நிற்கும், நிற்க வேண்டும் என்று கேட்டு புதிய தமிழகம் கட்சியின் சார்பாக இந்தத் தீர்மானத்தை முழுமனதோடு வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசின் சார்பாக முன்மொழிந்திருக்கக்கூடிய தீர்மானம் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களுடைய எண்ணத்தின் பிரதிபலிப்பாக, உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தக்கூடிய வகையிலே அமைந்திருக்கின்றது. அந்தத் தீர்மானத்தை மனித நேய மக்கள் கட்சி உளமார வரவேற்கிறது.

இந்தத் தீர்மானத்தில் இரண்டு அம்சங்கள் இடம்பெற்றிருக்கின்றன. முதலாவது அம்சம், அடுத்த மாதம் கொழும்பிலே நடைபெறக்கூடிய காமன்வெல்த் மாநாட்டிலே இந்தியாவின் சார்பாக எந்த ரூபத்திலும், அரசினுடைய துணைச் செயலாளர் என்ற அளவிலும்கூட யாரும் பங்குகொள்ளக் கூடாது என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவில், பெர்த் நகரில் 2011 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் காமன்வெல்த் மாநாடு நடைபெற்றபோது, இலங்கையிலே நடைபெற்ற மனித இனத்திற்கு எதிரான பேரழிவுகளைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேசப்பட்டது. அந்த மாநாட்டிலே பேசிய கனடா நாட்டினுடைய பிரதமர் Stephen Harper மிக வலிமையாக கொழும்பிலே அடுத்த உச்சி மாநாடு நடைபெறக்கூடாது என்பதை வலியுறுத்தினார். அப்போது இலங்கையினுடைய அதிபர் மஹிந்தா ராஜபக்சே பேச எழுந்தபோது, திரு. ஹார்பா சொன்ன வார்த்தைகளை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். அதை இந்திய அரசும்கூட உற்று நோக்கவேண்டுமென்பதற்காகப் பதிவு செய்ய விரும்புகின்றேன். ராஜபக்சே பேச எழுந்தபோது, 'இரத்த வாடை வீசும் இந்த மனிதனின் பேச்சை எங்களால் செவி மடுக்க முடியாது' என்று சொல்லி, அந்த அவையிலிருந்து அவர் வெளிநடப்புச் செய்தார். நம்முடைய தொப்புள்கொடி உறவு மக்களாக இருக்கக்கூடிய தமிழர்களின் எல்லா வகையான மனித உரிமைகளையும் காலில் போட்டு மிதித்து, சர்வதேச விதிமுறைகள்

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2013 அக்டோபர் 24

அனைத்தையும் குழிதோண்டிப் புதைத்து, ஒன்றரை இலட்சம் மக்களை படுகொலை செய்து, பாதுகாப்பு அரண் என்று ஐ.நா. சபை அறிவித்த இடங்களிலும்கூட, மருத்துவமனைகளிலும்கூட Cluster bombs-ஐ, கொத்து குண்டுகளை வீசி ஏராளமான மக்களைக் கொன்று குவித்த, இலங்கையிலே நடைபெற்ற அந்தப் பேரழிவுகளை நிச்சயமாக மனித நேயம் உள்ள யாரும் மறுக்கமுடியாது.

முற்பகல் 11-55

அதுதவிர, 1 இலட்சத்து 45 ஆயிரம் மக்கள் இன்றுவரை காணாமல் இருக்கின்றார்கள். போர் முடிந்த பிறகும்கூட, மறு நிவாரணம் (Rehabilitation measures) அங்கே நடைபெறவில்லை என்பதை ஐ.நா.—வினுடைய மனித உரிமை ஆணையாளரே மிகத் தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றார். இப்படிப்பட்ட நிலையிலே, கொழும்பிலே காமன்வெல்த் மாநாடு நடைபெறும். அதன் விளைவாக அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ராஜபக்சே காமன்வெல்த் அமைப்பினுடைய தலைவராக வருவது என்பது அவர்மீது சர்வதேச அரங்குகளிலே நடைபெற்று வரக்கூடிய விசாரணைகளுக்கும், அவர்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் ஒரு மிகப் பெரிய தடையாக இருக்கும். எனவே, இந்திய அரசு மிக வலிமையாக இந்த மாநாட்டிலே பங்குகொள்ளாமல் இருப்பதோடு மட்டுமல்லாமல், இன்று உலகத்திலே காமன்வெல்த் நாடுகளிலிருந்து நீக்கப்படுவதற்கு தகுதியுடைய ஓர் அரசு இருக்குமேயானால், அது நிச்சயமாக இலங்கை அரசாகத்தான் இருக்கும் என்று வலியுறுத்தவேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காமன்வெல்த் நாடுகளினுடைய Charter-ஐ அதாவது, கொள்கைப் பிரகடனத்தைப்பற்றி தங்களுடைய உரையிலே மேற்கோள் காட்டினார்கள். அந்தக் கொள்கைப் பிரகடனம்கூட நேற்று இரவு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்ட The Parliamentarian-னுடைய சமீபத்திய இதழிலே இடம் பெற்றிருக்கிறது, 16 அம்சங்கள் அதிலே இருக்கின்றன. இந்த 16 அம்சங்களையும் விரிவாக மேற்கோள் காட்டுவதற்கு இது பொருத்தமான நேரம் இல்லை. இருந்தாலும் ஒருசிலவற்றை மட்டும் நான் இங்கே பேசுகின்றேன். முரண்பட்ட சமூகங்களுக்கிடையிலே சகிப்புத்தன்மை பேணப்பட வேண்டுமென்பது அந்த காமன்வெல்த் அமைப்பினுடைய கொள்கைப் பிரகடனங்களில் ஒன்று. இன்று இலங்கையிலே



2013 அக்டோபர் 24][முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

இந்துக்களுடைய கோயில்கள், கிறித்துவர்களுடைய சர்ச்சுகள், அதேபோல முஸ்லிம்களினுடைய பள்ளிவாசல்களெல்லாம் ராஜபக்சே அரசாங்கத்திலே அடித்து நொறுக்கப்படக்கூடிய ஒரு நிலையைப் பார்க்கின்றோம். அந்த 16 அம்சங்களிலே ஒன்று, கருத்துரிமை. இலங்கையைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கக்கூடிய Sunday Leader பத்திரிகையினுடைய ஆசிரியராக இருந்த லசந்தா விக்ரமசிங்கே என்பவர் தன்னுடைய பத்திரிகையிலே, “நான் இந்த அரசால் விரைவில் கொல்லப்படுவேன்” என்று எழுதினார்; அவர் எழுதியதைப்போல சில வாரங்கள் கழித்து அவர் கொல்லப்பட்டிருக்கின்றார். இலங்கையிலே 60-க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் காணாமல் போய்விட்ட ஒரு சூழலைப் பார்க்கின்றோம். சட்டத்தின் ஆட்சி அங்கே நடைபெற வேண்டுமென்று சொல்கிறார்கள். இலங்கையினுடைய தலைமை நீதிபதியாக இருந்த ஷிரானி பண்டாரநாயகே அவர்கள், எந்தவிதமான நியாயமான காரணங்களுமின்றி நீக்கப்பட்ட ஒரு நிலையைப் பார்க்கின்றோம்.

அதேபோல, அதிகாரப் பரவலை காமன்வெல்த் அமைப்பினுடைய உறுப்பு நாடுகள் பின்பற்ற வேண்டுமென்று சொல்கிறார்கள். இலங்கையிலே தமிழ் பேசக்கூடிய இந்துக்களும், தமிழ் பேசக்கூடிய முஸ்லிம்களும் இலங்கை அதிபராக வரமுடியாது என்ற சட்டத்தையே ராஜபக்சே இயற்றி இருக்கின்றார். எனவே, ஒரு நாடு காமன்வெல்த் அமைப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்றால் அதற்கு முழு தகுதிவாய்ந்த நாடாக இலங்கை இருக்கின்றது என்பதைத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தீர்மானம் வலியுறுத்துகிறது. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** இதோ முடித்துவிடுகிறேன். 1995 இல் நைஜீரியாவிலே கென் சாரோ-வைவா என்ற மனித உரிமை ஆர்வலரும், 10 பேரும் தூக்கிலிடப்பட்டதற்காக அந்த நாடு நான்கு ஆண்டுகள் காமன்வெல்த் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டது.

இலட்சக்கணக்கான மக்களைக் கொன்ற இலங்கையும் நிச்சயமாகக் காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும்; தமிழக மக்களுடைய உணர்வுகளைப்

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2013 அக்டோபர் 24

பிரதிபலிக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை மத்திய அரசு முழுமையாக உணர்ந்து இந்தத் தீர்மானத்திற்குச் செவிசாய்க்க வேண்டும்; நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே வாழுகிற நம்முடைய தமிழ்ச் சகோதரர்கள்மீது மத்திய அரசாங்கம் மிகவும் அக்கறை கொண்டுள்ளது என்பதற்குச் சில சான்றுகளை மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

இலங்கைத் தமிழர்களுக்காக வாதாடிய, எங்களுடைய கட்சித் தலைவர் திரு. ராஜீவ் காந்தி அவர்களை நாங்கள் இழந்துவிட்டோம். இருந்தாலும்கூட, இன்றுவரை மத்திய அரசாங்கம் இலங்கையில் வாழுகிற தமிழர்களுக்காக பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. சமீபத்தில்கூட கிட்டத்தட்ட ரூ.4,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, நம்முடைய தமிழ்ச் சகோதரர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல, ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுவதும் இலங்கைத் தமிழர்களுக்காகச் செலவு செய்யப்படுகிறதா என்பதைக் கண்டறிவதற்கு குழு அமைக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இன்றைக்கு நம்முடைய தமிழக அரசு கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை, தமிழக காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவராகிய நானும், எங்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் முழுமனதாக ஆதரிக்கிறோம்.

மேலும், இந்தத் தீர்மானத்தின்மூலம் ஒரு காலகட்டத்திலே நமது நாட்டிற்கும், இலங்கை நாட்டிற்கும் உள்ள உறவு பாதிக்கப்படுமானால், அங்கு வாழுகின்ற நமது தமிழ்ச் சகோதரர்களுக்கு எந்தவிதமான உதவிகளையும் நம்மால் செய்ய முடியாமல் போய்விடும் என்ற அச்சமும் எங்களுக்கு இருக்கின்றது.

அதுமட்டுமல்ல, நமது இந்திய நாட்டின் எல்லையில்கூட பாதுகாப்புப் பிரச்சினை வந்துவிடும் என்ற அச்சமும் எங்களுக்கு



2013 அக்டோபர் 24] [திரு. கே. கோபிநாத்]

இருக்கின்றது என்பதை மட்டும் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தத் தீர்மானத்தை நாங்கள் முழுமனதாக ஆதரிக்கிறோம். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வழிமொழிந்து, அதை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானம், ஒட்டுமொத்த தமிழர்களுடைய உணர்வை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளதோடு, இனப் படுகொலை நடைபெற்ற இலங்கையில் காமன்வெல்த் மாநாட்டினை நடத்தக்கூடாது; அந்த மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக்கூடாது; முற்றிலுமாக புறக்கணிக்க வேண்டும்; பெயரளவுக்குக்கூட இந்திய நாட்டின் சார்பாகப் பிரதிநிதிகள் அந்த மாநாட்டில் கலந்துகொள்ளக்கூடாது என்கின்ற அழுத்தமான தீர்மானமாகவும் அமைந்துள்ளது.

"இலங்கைத் தமிழர்கள் சுதந்திரமாகவும், சிங்களர்களுக்கு இணையாகவும் வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்வரை, காமன்வெல்த் கூட்டமைப்பிலிருந்து இலங்கை நாட்டைத் தற்காலிகமாக நீக்கி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய பேரரசை தமிழ்நாடு சட்டப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது" என்ற இந்தத் தீர்மானம் முற்றிலும் சரியானது மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ் இனத்திற்காக இந்த அவையில் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய தீர்மானமாக நாங்கள் கருதுகிறோம். 'இலங்கையில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா நிச்சயமாக கலந்துகொள்ளக்கூடாது' என்ற உணர்வை இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தமிழர்கள் மட்டுமல்ல, உலகம் முழுவதும் இருக்கக்கூடிய 8 கோடி தமிழ் மக்களும் இந்தியாவிற்கு எடுத்துக்காட்டக்கூடிய ஒரு தீர்மானமாக இன்று முன்மொழியப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானம் அமைந்திருக்கிறது. அந்த முறையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி இந்தத் தீர்மானத்தை வரவேற்கிறது.

[2013 அக்டோபர் 24

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமன்வெல்த் கூட்டமைப்பு என்பதே பிரிட்டிஷ் அரசுக்கு நாம் அடிமைப்பட்டு இருந்ததை, காலனி நாடாக இருந்ததை, ஞாபகப்படுத்துகிற ஒரு நினைவுச் சின்னமாகத் தொடர்கிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்த காமன்வெல்த் கூட்டமைப்பே அவசியமில்லை என்ற கருத்தை ஏற்கெனவே தொடர்ந்து சொல்லிவருகிறது. அதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதுபோல காமன்வெல்த் அமைப்பு அவசியமே இல்லை என்பதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்கிறேன்.

இலங்கை அரசு பதின்மூன்றாவது அரசியல் சட்டத் திருத்தத்தினை அமல்படுத்தவில்லை. அமல்படுத்தாதது மட்டுமல்ல, அதை நீர்த்துப்போகச் செய்யவும் தொடர்ந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. பதின்மூன்றாவது அரசியல் சட்டத் திருத்தத்தை எந்த அளவில் எல்லாம் அவர்கள் கெடுக்க நினைக்கிறார்கள் என்று இப்போது அங்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கூறிய கருத்துக்கள்மூலம் நாம் அறிவோம்.

இலங்கை இராணுவம், தமிழர் பகுதியிலே நடத்திய அட்டூழியங்கள், படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் எண்ணிலடங்காதவை. கல்விச் சாலைகளை விடவில்லை, மருத்துவமனைகளை விடவில்லை, அனைத்திலும் குண்டு வீசினார்கள். இப்படிப்பட்ட போக்கை எதிர்த்து சர்வதேச அமைப்பிலே நம்முடைய கருத்துகளை ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். சர்வதேச அமைப்புகள் இலங்கைப் பிரச்சினையிலே தலையிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம், விசாரணை தேவையென்று நாம் வலியுறுத்தவும் செய்திருக்கிறோம்.

சமீபத்திலே திருமதி நவநீதம்பிள்ளை அங்கே சுற்றுப்பயணம் மேற்கொண்டு, வெளியிட்ட கருத்துகளும் இங்கே கவனிக்கத்தக்கவை. ஆகவே, நம் அண்டை நாடான இலங்கையிலே உள்ள அரசு,



2013 அக்டோபர் 24] [திரு. அ. சவுந்தரராசன்]

தமிழ் மக்களுக்கு இழைத்திருக்கின்ற கொடுமைகளின் விளைவுகளில் இருந்து பாதிக்கப்பட்ட அம் மக்கள் நிவாரணம் பெறவும், தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்படவும் இந்திய அரசு இராஜ்ய அழுத்தங்களைத் தீவிரப்படுத்த வேண்டும், தீவிரப்படுத்த வேண்டும் என்று இந்தத் தருணத்திலே நான் சார்ந்திருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வலியுறுத்தி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.*

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற, அரசினர் தனித் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வழிமொழிந்து வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காமன்வெல்த் மாநாடு இலங்கையில் நடைபெறப் போகிறது என்கின்ற செய்தி வந்ததிலிருந்து அந்த மாநாடு இலங்கையில் நடைபெறக்கூடாது, அப்படியே அங்கு நடைபெற்றாலும் இந்தியா அதிலே பங்கேற்கக்கூடாது என்று தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள் குரல் கொடுத்து வருகிறார்கள்.

25-3-2013 அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயற்குழுக் கூட்டத்திலும், அதைப்போல் 16-7-2013 அன்று டெசோ அமைப்பின் சார்பில் நடைபெற்ற கூட்டத்திலும் இதுகுறித்து விரிவான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்கள், இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு இதுகுறித்து விரிவாகக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். தி.மு. கழகத்தின் சார்பில் மட்டுமல்ல, பல்வேறு கட்சிகளின் சார்பில், தமிழின உணர்வுள்ள அமைப்புகள், ஆர்வலர்கள், ஆதரவாளர்கள், இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழக முதலமைச்சர் அவர்களே பிரதமர் அவர்களுக்கு 25-3-2013 அன்றும் 17-10-2013 அன்றும் இதுகுறித்துக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். காமன்வெல்த் மாநாடு இலங்கையில் நடைபெறக்கூடாது என்று காமன்வெல்த் நாடுகளினுடைய தலைமை நீதிபதிகள் 27 பேர்கள்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2013 அக்டோபர் 24

இதுகுறித்து ஒருமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, தங்களது கடுமையான எதிர்ப்பை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிப்பது என்று கனடா நாட்டின் சார்பில் அகில உலகத் தமிழர்களும் அறிவித்திருக்கிறார்கள். காமன்வெல்த் மாநாடு இலங்கையில் நடைபெறக்கூடாது என்று ஆஸ்திரேலியா நாட்டில் நடைபெற்ற மாபெரும் கையெழுத்து இயக்கத்தில் பங்குகொண்டு, ஆஸ்திரேலிய நாட்டின் முன்னாள் பிரதமர் திரு. பிரேசர் அவர்களே அதிலே கையெழுத்து போட்டிருக்கிறார்கள்; ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், இதற்கு விரிவான வகையிலே கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல, காமன்வெல்த் மனித உரிமை அமைப்பு, ஆஸ்திரேலிய மனித உரிமை சட்ட மையம் ஆகியவை தங்களுடைய எதிர்ப்பை முறையாகப் பதிவு செய்திருக்கின்றன.

பிற்பகல் 12-10

தமிழக அளவிலே, 'இந்தியா காமன்வெல்த் மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடாது' என்று ஒன்றுபட்டு குரல் கொடுப்பது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய ஒன்று; பாராட்டுக்குரிய ஒன்று. பரம்பரை பரம்பரையாக தமிழினத்தின்மீது கொண்டிருக்கக்கூடிய மாறாப் பகையை, தீரா வெறுப்புணர்வை இலங்கை சிங்கள அரசு சிறிதளவும் குறைத்துக்கொள்ளவில்லை. எனவேதான் அப்படிப்பட்ட நிலையில், இலங்கையில் காமன்வெல்த் மாநாடு நடைபெறும் என்றால், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு காமன்வெல்த் அமைப்பின் அவைத் தலைவராக ராஜபக்சேதான் இருப்பார். அதனால், ஐம்பத்து நான்கு நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கக்கூடிய அமைப்பின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் ஒருவரை நீதி விசாரணைக்கு உட்படுத்துவது ஓர் இக்கட்டான சூழ்நிலையை நிச்சயமாக உருவாக்கும். இந்தச் சூழலில்தான், இந்தியா தன்னுடைய கண்டனத்தினைப் பதிவு செய்யக்கூடிய வகையில், நிச்சயமாக காமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்க வேண்டும். நிறைவாக நான் கூறிட விரும்புவது, உலகத் தமிழர்களிடம் ஒன்றுபட்டு இருக்கக்கூடிய உணர்வைப் போற்றி மதிக்கத்தக்க வகையில், காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான்



2013 அக்டோபர் 24] [திரு. மு.க. ஸ்டாலின்]

வலியுறுத்தி, அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்று அமைகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே முன்மொழிந்து இருக்கின்ற அரசினர் தீர்மானத்தின் முதல் பகுதி எதிர்பார்த்தது; அதனுடைய பிற்பகுதி எதிர்பாராதது. எதிர்பார்த்தது நிறைவேறியதற்கும், எதிர்பாராமல் கிடைத்த ஆதாயத்திற்கும் முதலில் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடர் துவங்கிய உடனே, 'இலங்கையில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாது' என்ற நிலையை தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றும் என்று உலகமெங்கும் உள்ள தமிழர்கள் எதிர்பார்த்தார்கள். அதனை, முதல் நிகழ்ச்சியாக, இன்றையதினமே நிறைவேற்றியிருக்கிறார்கள். நேற்றையதினம் இரங்கல் தீர்மானம் என்கின்ற காரணத்தினால் வேறு அலுவல்கள் இல்லை. முதல் நிகழ்ச்சியாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பது, உலகமெல்லாம் வாழ்கின்ற தமிழர்களின் நெஞ்சங்களில் பால் வார்த்தது போல் நிச்சயமாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காமன்வெல்த் மாநாடு கொழும்பில் நடைபெறுவது, அதுவும் அதிபர் மஹிந்தா ராஜபக்சே தலைமையில் நடைபெறுவது என்பது, ஜீவகாருண்ய சபையை, கசாப்புக் கடைக்காரர் தலைமை வகித்து நடத்துவது போன்றுதான் அந்தக் காமன்வெல்த் மாநாடு நடைபெறும் என்பதில் ஐயமில்லை. ஆனால், ஒன்றைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக, இந்திய அரசினுடைய வெளியுறவுக் கொள்கை, இந்தத் தீர்மானத்திற்கு எந்தவகையில் மரியாதை தரும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஏற்கெனவே பல நேரங்களில் கடிதங்கள் எழுதியதையும் அவற்றால் எந்தப் பலனும் ஏற்படவில்லை என்பதையும் தெரிவித்தார்கள். இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இந்திய அரசு ஒரு தெளிவான கொள்கையை மேற்கொள்ள வேண்டும். எல்லாரும் என்ன

[திரு. ச. இராமச்சந்திரன்] [2013 அக்டோபர் 24

நினைக்கின்றார்கள் என்றால், "தமிழ்நாட்டில் இருக்கிறவர்கள் இப்படித்தான் தீர்மானம் போடுவார்கள்; எல்லாக் கட்சியினரும் சேர்ந்து போடுவார்கள்; அதுவும் இப்பொழுது நாடாளுமன்றத் தேர்தல் வருகிற நேரம், ஆகையினால் இதில் ஒன்றும் வியப்பு இல்லை. ஆனால், இந்திய அரசு என்பது தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியா முழுவதற்கும் சேர்த்து என்ன கொள்கை என்றுதான் பார்க்க வேண்டும்; ஆகையினால், பிரதமர் அவர்கள் காமன்வெல்த் மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும்" என்ற ஒரு கருத்து பலமாக டெல்லியிலே உலவுகிறது. இது வெறும் தமிழர் பிரச்சினைதான், அதுவும் தேர்தலுக்காகத்தான் நாம் இப்படி தீர்மானிக்கின்றோம் என்று யாராவது கருதுவார்களேயானால், அவர்களையெல்லாம் நான் பார்த்துக் கேட்பது இதுதான்--அப்படியானால், கனடா நாட்டு பிரதமர் வர மறுப்பானேன். Stephen Harper-க்கு என்ன தமிழர்களா ஓட்டுப்போடப் போகிறார்கள்? இதுவரையிலே நடைபெற்ற எல்லா காமன்வெல்த் மாநாடுகளிலும் கலந்துகொண்ட எலிசபெத் இராணியார், இந்தக் காமன்வெல்த் மாநாட்டிலே கலந்து கொள்ளாமல் தனது மகன் பிரின்ஸ் சார்லஸை அனுப்புவானேன்? இங்கிலாந்து நாட்டின் பிரதமராக உள்ள David Cameron அவர்கள் இங்கே வருகிறபொழுது, அங்கேயுள்ள வெளியுறவுத் துறையினுடைய பாராளுமன்றக் குழுவினர் அதைக் கண்டிப்பானேன்? ஆகவே, இது ஏதோ தமிழ்நாட்டிலே உள்ள அரசியல் தலைவர்கள், குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தேர்தல் ஆதாயத்திற்காக அல்லது தமிழர்களின் உரிமை ஒன்றை மட்டுமே கருதிச் செய்கிறோம் என்று பொருள் அல்ல. தமிழர் உரிமை மீறல் என்பது மனித உரிமை மீறல். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நாட்டினுடைய அரசு, அந்த நாட்டிலுள்ள மக்களையே கொடுமைப்படுத்தினால் என்ன பரிகாரம்? அவர்களே கொலைத் தொழிலிலே இராணுவத்தையும், காவல் துறையையும் பயன்படுத்துவார்களேயானால், அதற்கு யார் பொறுப்பு? இறையாண்மை என்று தலையிடாமல் இருந்துவிட முடியுமா?

பிற்பகல் 12-15

ஐ.நா-வினுடைய சாசனத்திலே, பகுதி இரண்டு (4)-ல் இறையாண்மையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதேநேரத்தில், மனித உரிமை மீறல்கள் என்றால், அதில் தலையிடுவதற்கு சர்வதேச நாடுகளுக்கு உரிமை உண்டு. இன்னும்



2013 அக்டோபர் 24] [திரு. ச. இராமச்சந்திரன்]

சொல்லப்போனால், இராணுவ ரீதியாகவே தலையிடலாம். அதைத் தடுத்து நிறுத்தலாம். மனித குலம் அழிவதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. ஆகவே, இந்திய அரசு, 'பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழன்' என்ற நிலையில் தன்னுடைய வெளியுறவுக் கொள்கையை வகுத்துக்கொள்ளக் கூடாது. அதனுடைய விளைவுதான் இன்றைக்கு ஏற்பட்டுள்ள பல்வேறு குழப்பங்கள்.

இன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோதுகூட இங்கே குறிப்பிட்டார்கள். 2011-ல் இங்கே இந்தக் காமன்வெல்த் மாநாடு நடைபெற வேண்டுமென்று அப்போது வாதிட்டுப் பெற்றது இந்தியாதான். கனடாவை எதிர்த்து, இங்கிலாந்தை எதிர்த்து, ஆஸ்திரேலியாவை எதிர்த்து, இங்கே காமன்வெல்த் மாநாட்டை நடத்த வேண்டுமென்று வாதிட்டுப் பெற்றதே இவர்கள்தான். ஆனால் அதேநேரத்தில், இன்றையதினம் பிரதமர் மட்டும் போகமாட்டார்; மற்றவர்கள் போனாலும் போகலாம் என்கின்ற ஒரு நிலையை எடுக்கிறார்கள். இந்திய அரசு என்ன நினைக்கிறது என்றால், நாம் சென்றால்தான், இலங்கை அரசோடு பேசி, அங்கே உள்ள தமிழர்களுக்கு உரிமை பெற்றுத் தர முடியுமென்று கருதுகிறது.

"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு?"

என்று சொல்லக்கூடிய திருவள்ளுவரே மிக அழகாகச் சொல்கிறார்.

"சொல்லப் பயன்படுபவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்"

என்கிறார். பெரியவர்களுக்கு நாம் சொன்னால் அவர்கள் தெரிந்துகொள்வார்கள். ஆனால், கீழ்மக்களை கரும்பைப்போல, நாம் கசக்கினால்தான் அவர்கள் பயன்படுவார்கள் என்று திருவள்ளுவரே சொல்கிறார். இலங்கையினுடைய நிலைமை அப்படி. 13-வது அரசியல் சட்டத் திருத்தத்தை எப்பொழுதோ ஒன்றுமில்லாமல் செய்துவிட்டார்கள். தமிழர் பகுதி என்பதை நிராகரித்துவிட்டு, கிழக்கு மாகாணம், மேற்கு மாகாணம் இணைந்த பகுதியை 2006-லே இரத்துச் செய்துவிட்டார்கள். இப்பொழுதும் அங்கு நிலம் அல்லது காவல் துறை, ஆகியவற்றினுடைய அதிகாரங்களைக் கொடுக்கப் போவதில்லை. ஆக, நம்பக் கூடாதவர்களை நம்புவதில் இந்திய அரசு தெளிவான கொள்கை முடிவை எடுக்க வேண்டும்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [2013 அக்டோபர் 24

மனித உரிமை மீறல், போர்க் குற்றம், இனப் படுகொலை இந்த மூன்றையும் இலங்கை அரசு செய்திருக்கிறது. ஆனால், அவர்கள் இப்பொழுது மிரட்டுகிறார்கள். எங்களுக்குச் சீனா இருக்கிறது; பாகிஸ்தான் இருக்கிறது; இந்தியாவைப்பற்றி நாங்கள் கவலைப்பட வேண்டியதில்லை என்று மிரட்டுகிறார்கள். டெல்லியிலே இருக்கிறவர்கள்கூட என்ன நினைக்கிறார்கள் என்றால், இவர்கள் எங்கே சீனாவுடன் போய்விடுவார்களோ, பாகிஸ்தானுடன் போய்விடுவார்களோ; அதனால் இங்கேயிருக்கின்ற நம்முடைய செல்வாக்கு தடுக்கப்பட்டுவிடுமோ என்று சிந்திக்கின்றார்கள்.

ஆனால், உண்மையில் என்ன நிலைமையென்றால், இது இன்று, நேற்றல்ல; டி.எஸ். சேனநாயகா காலத்திலேயிருந்தே அவர்கள் இந்தியாவிற்கு எதிர்ப்பாக இதைச் செய்து வந்திருக்கிறார்கள். அன்றைக்கு மலையகத் தமிழர்களுடைய குடியுரிமையைப் பறித்தார்கள். பண்டித ஜவஹர்லால் நேரு அதை எதிர்த்தார். காலம் காலமாக அங்கே இருந்தவர்கள் அவர்கள். வேறு ஒரு பாவமும் செய்யவில்லை. முதன்முதலில் இலங்கையில் நடந்த தேர்தலில் கம்யூனிஸ்டுகளுக்கு ஓட்டுப் போட்டார்கள். அதன் காரணமாக, மலையகத் தமிழர்களுடைய குடியுரிமையைப் பறித்துவிட்டார்கள்.

இதைச் சரியாக உணர்ந்து முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தெளிவாக 1983 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திலே குறிப்பிட்டார். இலங்கை அவர்களுடைய விருப்பத்திற்கேற்ப, மேலைநாடுகளோடு மிகுந்த தொடர்பு வைத்துகொண்டு, —இதேபோல் இந்தியாவை மிரட்டினார்கள்—. அப்பொழுது அவர் சொன்னார், Sri Lanka is not just another country. நாங்கள் சும்மா இருக்கமாட்டோம். மற்ற நாடுகள் மாதிரி இலங்கை அல்ல என்று சொன்னார். 1983 ஆம் ஆண்டு Parliament-லே சொன்னார். ஆகவே, Sri Lanka is not just another country. இன்றைக்குச் சீனாவையும், பாகிஸ்தானையும் வைத்து கொண்டு மிரட்டுகிறார்கள் என்று இவர்கள் பயப்படுவதில் அர்த்தமேயில்லை.

பிற்பகல் 12-20

இன்னும் சொல்லப்போனால், வங்கதேசம் விடுதலையானபோது, அந்த நேரத்திலே பிரதமராக இந்திரா காந்தி அவர்கள் இருந்தார்கள். இதே இலங்கை என்ன செய்தது என்றால்,



2013 அக்டோபர் 24] [திரு. ச. இராமச்சந்திரன்]

பாகிஸ்தானுக்கு உதவி செய்தது. அவர்களுக்குப் பெட்ரோல் எல்லாம் கொடுத்து, விமானப் படைக்கு உதவி செய்தார்கள்; அமெரிக்காவின் பக்கம்தான் இருந்தார்கள். அமெரிக்காவினுடைய formidable 7th fleet-மிகப் பெரிய ஏழாவது கப்பல் படை வங்காள விரிகுடாவிற்கு உள்ளே வந்தது. அது வருவதற்குள், வங்கதேசத்திற்கு விடுதலை பெற்றுத் தந்துவிட்டோம்.

இலங்கைக்கு ஆதரவாக சீனாவோ, பாகிஸ்தானோ வருகின்ற அளவிற்கு, இங்கே ஒன்றும் அதைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆகையினால், இலங்கை மிரட்டுகிறது என்றால், அதற்கு அஞ்சவேண்டிய அவசியமில்லை. எந்த நேரத்திலேயும் இந்தியாவினுடைய sphere of influence-க்கு கட்டுப்பட்டுத்தான் இலங்கை இருக்கவேண்டும். எனவே, மத்திய அரசு நிச்சயமாக மறுபரிசீலனை செய்து, தெளிவான கொள்கை முடிவினை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காமன்வெல்த் மாநாட்டினைப் புறக்கணிப்பதோடு மட்டுமல்ல; 2014 மார்ச் மாதத்திலே, U.N.H.R.C.-ஐ.நா. மனித உரிமைக் கமிஷன் வரப் போகிறது. மனித உரிமைகளை முன்னெடுத்துக் காப்பாற்றுகின்ற மகத்தான நாடு இந்தியா என்று கொள்கைரீதியிலே இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு, இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரித்து, என் உரையை முடிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வானின் காயங்கள் கறுப்பு மேகங்கள்; மண்ணின் காயங்கள் தரிசான பாகங்கள்; நிலவின் காயங்கள் நிலையில்லா உருவங்கள்; வெளிச்சத்தின் காயங்கள் வெற்று நிழற்பிம்பங்கள்; மலையின் காயங்கள் மடிந்து விழும் மடுக்கள்; உறவின் காயங்கள் உரசல் பேதங்கள்; உணர்வின் காயங்கள் உணராத உள்ளங்கள்; தலைமையின் காயங்கள் தம் மக்கள் படும் வேதனைகள்.

தமிழின மக்கள் எங்கிருந்தாலும், அவர்களுக்கு இழைக்கப்படும் துன்பம், அநீதி, இன்னல், கொடுமை ஆகியவற்றைத் தன் துன்பமாகக் கருதும், தொண்டுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் (மேசையைத் தட்டும் ஒலி) முன்மொழியப்பட்டுள்ள இந்தத் தீர்மானம் மிகச் சிறப்பு வாய்ந்தது.

[பேரவைத் தலைவர்] [2013 அக்டோபர் 24

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் மட்டும்தான் உலகத் தமிழர்களை உய்விக்க முடியும், உயர்த்த இயலும். தாய்ப் பாசத்தோடு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழின மக்களை அரவணைக்கிறார்கள்; அன்பு காட்டுகிறார்கள். கரும்பு நெஞ்சத்தோடு அன்பு காட்டினாலும், இரும்புக் கரம் கொண்டு எதிரிகளை எதிர்ப்பார்கள். இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை, மனித உரிமை மீறல்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் என்றும் அனுமதிக்கமாட்டார்கள்.

“மரம் தனக்காகப் பழுப்பதில்லை; ஆறு தனக்காக ஓடுவதில்லை. அதைப்போலவே சான்றோர்களும் தமக்காக வாழ்வதில்லை” என்றார் குரு நானக். “எனக்காக ஏதுமில்லை; என்வாழ்வு எல்லாமும் தமிழின மக்களுக்கே” (மேசையைத் தட்டும் ஒலி) என்னும் துறவறத்தில் துடிக்கின்ற தூய தொண்டு இதயம் கொண்டவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள். தமிழினம் உயர அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருபவர் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஓய்வறியா உழைப்பினால், வழிகாட்டுதலினால் தமிழகம் மட்டுமல்ல; இந்தியாவும், இலங்கையில் உள்ள தமிழ் மக்களும் நலம் பெறுவர்; விடியலுக்கான நேரம் வந்துவிட்டது; வெற்றிக்கான காலம் கனிந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தைக் கொண்டுவந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானத்தை நான் ஆரம்பத்தில் முன்மொழிந்தபோதே, அதை முன்மொழிவதற்கு முன்பாகவே, இதுகுறித்து என்னென்ன கருத்துகள் தெரிவிக்க வேண்டுமென்று நான் விரும்பினேனோ, அத்தனை கருத்துகளையும் தெரிவித்துவிட்டேன். ஆகவே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவை உறுப்பினர்களை, நான் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2013 அக்டோபர் 24] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

## 5. அரசினர் தீர்மானம்

### விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றை தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத், (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2013) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

[2013 அக்டோபர் 24

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்). 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2013), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2013)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

---

@ 24-10-2013 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2013 அக்டோபர் 24] [பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2013) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்

சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு உறுப்பினர் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு (Syndicate) ஒரு சட்டமன்ற உறுப்பினரைத் தேர்ந்தெடுக்குமாறு அப்பல்கலைக்கழக ஆட்சியரிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது.

மேற்குறிப்பிட்ட பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினரின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்பெற விரும்பும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுவினை 25-10-2013 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 1-00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வேட்பு மனுப் படிவம் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். வேட்பு மனுக்கள் 25-10-2013 அன்று மாலை 4-00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 25-10-2013 அன்று மாலை 5-00 மணிக்குள் வேட்பு மனுவினைத் திரும்பப் பெறலாம்.

ஒன்றுக்கு மேற்பட்ட செல்லத்தக்க வேட்பு மனுக்கள் பெறப்படின், அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு





உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும். தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (25-10-2013) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12-28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. இந்தியாவுடனான பரஸ்பர ஏற்பாடுகளின்கீழ், அறிவிக்கையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள நாடுகளின் தூதரகங்கள் அல்லது உதவித் தூதர் அலுவலகம் மற்றும் அதனுடைய தூதரக அதிகாரிகளின் அலுவலகப் பயன் மற்றும் சொந்தப் பயன்பாட்டிற்காக விற்பனை செய்யப்படும் சீருந்துகள் மற்றும் இரண்டு சக்கர வாகனங்கள் யாதொரு உள்ளூர் பகுதிக்குள் நுழைவதைப் பொறுத்தவரையில், யாதொரு இறக்குமதியாளர் செலுத்த வேண்டிய நுழைவு வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (சி2) துறையின் 8-12-2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 153-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் நுழைவதற்கான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 5-8-2008 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 29-7-2008 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 137-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய (ஏழாம் திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 57/2008) 2-1-2009 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயித்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 2-1-2009 ஆம்

[2013 அக்டோபர் 24

நாளிட்ட அரசாணை (நிலை) எண் 2-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (d) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. சென்னை மாநகராட்சியைத் தவிர மற்ற அனைத்து மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில், ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்டு ஆனால், ஐந்து கோடி ரூபாய்க்கு மிகாத மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் அளிப்பதற்காக அரசின் அதிகாரங்களை, நகராட்சி நிருவாக இயக்குநரால் செயல்படுத்துவது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 16-2-2009 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 18-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 8/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10(3) பிரிவு மற்றும் 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (பொதுமக்களுக்கு தெரிவித்தல்) விதிகளை இயற்றியது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின்



2013 அக்டோபர் 24]

9-6-2009 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 95-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (d) பிரிவு, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்29/1994) 11(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10(3) பிரிவு மற்றும் 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. 28-8-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில், பாகம் III, பிரிவு-I(a)-ல் வெளியிடப்பட்ட நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் SROA-28(a)/2006 ஆம் எண் அறிவிக்கையிலும் மற்றும் 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தேர்தல்கள்) விதிகளிலும் திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 8-12-2009 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 238-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (d) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு

*சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10(3) பிரிவு மற்றும் 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*7. மாநிலத்திலுள்ள நுகர்வோருக்கு, வீட்டு பயன்பாட்டுக்கான, பெட்ரோலியத் திரவ எரிவாயு (சமையல் எரிவாயு) விற்பனைமீது, தமிழ்நாட்டிலுள்ள யாதொரு விநியோகிப்பாளரால் செலுத்தத்தக்க வரியிலிருந்து அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 6-2-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 7-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*8. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் பார்களில்) விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (6) துறையின் 23-7-2012 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 34-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*9. சிறப்பு நிலை நகராட்சிகள், தேர்வு நிலை நகராட்சிகள், முதல் நிலை நகராட்சிகள் மற்றும் இரண்டாம் நிலை நகராட்சிகள் என நகராட்சிகளை வகைப்பாடு செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 2-12-2008 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 238-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*





*10. தமிழ்நாட்டிலுள்ள மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டிற்காக பின்பக்கம் மோட்டார் பொருத்தப்பட்ட பேட்டரியினால் இயங்கும் ஸ்கூட்டர் விற்பனைமீது யாதொரு வணிகரால் செலுத்தத்தக்க வரியிலிருந்து அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 1-3-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 18-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*11. சென்னை, மைலாப்பூர் ஸ்ரீ இராமகிருஷ்ணா மடத்தால், பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் மற்றும் அவருடைய சீடர்களின் புகைப்படங்கள், படங்கள், பதக்கங்கள், MP3-க்கள், குறுந்தகடுகள், டி.வி.டி.-க்கள் ஆகியவற்றின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 6-2-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 9-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*12. யாதொரு வணிகர், வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி, திருவாளர்கள் இராமகிருஷ்ணா மடத்திற்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, பொருட்களின் விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 6-2-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 10-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*13. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2008 ஆம் ஆண்டு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் மின்சார ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 19-1-2013 ஆம் நாளிட்ட எண்த.மி.ஒ.ஆ/ ம.சா.எ.ஆ. ஒழுங்குமுறை விதி/16/11-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

[2013 அக்டோபர் 24

*14. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், (i) தமிழ்நாடு மின்வழங்கல் விதித் தொகுப்பிற்கு திருத்தம் செய்தது குறித்து 29-11-2012 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.அ/மி.வ.வி7-31 மற்றும் (ii) தமிழ்நாடு மின்பகிர்மான விதித் தொகுப்பிற்கு திருத்தம் செய்தது குறித்து 29-11-2012 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./மி.வ.வி/8-16 ஆகியவற்றில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*15. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (மொத்த விற்பனை மூலம் வழங்குதல்) விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறையின் 26-3-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 12-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*16. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (மொத்த விற்பனை மூலம் வழங்குதல்) விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறையின் 29-3-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 17-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*17. யாதொரு வணிகர், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, சென்னை 600 017-ல் உள்ள ஸ்ரீ சாரதா மடத்திற்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 21-3-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 32-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*18. 11-7-2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-*II*, பிரிவு 1-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின்* II(1)/CTR/12(R-28)/2011 *ஆம் எண் அறிவிக்கையில் மாறுபாட்டினை செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத்(பி2) துறையின் 21-3-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 30-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*



2013 அக்டோபர் 24]

*19. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (மொத்த விற்பனையில் வழங்கல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறையின் 26-3-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 11-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*20. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (சி1) துறையின் 29-5-2013 ஆம் நாளிட்ட 54 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*21. சென்னையில் உள்ள தாய்பே பொருளாதாரம் மற்றும் பண்பாட்டு மையத்திற்கும், தமிழ்நாட்டில் உள்ள அந்நாட்டைச் சேர்ந்த அலுவலர்களுக்கும் அலுவலகப் பயன்பாட்டிற்காகவும், தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவும் விற்பனை செய்யப்படும் பொருள்கள்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 16-4-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 42-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*22. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2004 ஆம் ஆண்டு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து 23-11-2011 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./நு.கு.தீ.ம & மி.கு./6-5-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

[2013 அக்டோபர் 24

*23. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், (i) 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மாநில ஆலோசனைக் குழு ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து 11-6-2012 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./மா.ஆ.கு.ஒ./2-34 மற்றும் (ii) 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மாநில ஆலோசனைக் குழு ஒழுங்குமுறை விதிகளுக்கு 5-7-2012 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./மா.ஆ.கு.ஒ./2-33 ஆகியவற்றில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*24. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (பல்லாண்டுக்கான மின் கட்டண வீதத்தின்படி மாநிலத்திற்குள் மின் செலுத்துதல்/மின் பகிர்மானத்திற்கான மின் கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து 28-11-2012 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./ப.ஆ.மி.(MYT)/18/3-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*25. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் தேவைத் தரப்பு மேலாண்மை) ஒழுங்குமுறை விதிகளை இயற்றியது குறித்து 26-2-2013 ஆம் நாளிட்ட எண்த.மி.ஒ.ஆ./தே.த.மே.(D.S.M.)/20/1-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*26. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி1) துறையின் 11-6-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 63-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*



2013 அக்டோபர் 24]

*27. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சி.ஜே.2) துறையின் 17-5-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 70-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*28. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (விற்பனை மற்றும் அனுமதி) விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறையின் 29-3-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 14-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*29. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (மொத்த விற்பனை மூலம் வழங்குதல்) விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறையின் 29-3-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 15-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*30. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (மொத்த விற்பனை மூலம் வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறையின் 29-3-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 16-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*31. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சி.ஜே.2) துறையின் 16-7-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 123-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம்ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*32. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சி.ஜே.2) துறையின் 26-7-2013 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 130-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*33. 2011-2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் முப்பத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*1. 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம். எண் 2/2013.)*

*2. 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் (சீர்திருத்த) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2013.)*

*3. 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) நீக்க அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2013.)*

* * * * *